பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 09 வெள்ளிக்கிழமை 23.06.2023 கதிர் 224

# மனித உரிமைகள் பேரவையில் இருந்து இலங்கை ஒதுங்க இடமளிக்கப்படாது

## தமிழர் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தது அமெரிக்கா

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்புப் பொறிமுறையில் இருந்து இலங்கை விலகுவதற்கு அனுமதிக்கமாட்டோம் என்று அமெரிக்கா உறுதியளித்துள்ளது அமெரிக்கா. உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சின்போது, உலகளாவிய குற்றவியல் நீதிக்கான துணைச் செயலர் அம் பெத் வான் இந்த உறுதிமொழியைத் தெரிவித்தார்.

அமெரிக்கஇராஜாங்கத்திணைக்களத்தின் அழைப்பின் பேரில் உலகத் தமிழர் பேரவைப் பிரதிநிதிகள் செவ்வாய்க்கிழமை இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர். ஒரே நாளில் திணைக்களத்தின் 2 உதவிச் செயலர்களையும் தேசிய பாதுகாப்புச் சபையின் பணிப்பாளரையும் செனட் மற்றும் காங்கிரஸ் அயலுறவுக் குழுக்களின் மூத்த அதிகாரிகளையும் அடுத்தடுத்துச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் டொனால்ட் லூ, உலகளாவிய குற்றவியல் நீதிக்கான துணைச் செயலர் அம் ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ரணில் விக்கிரமசிங்க இன்னும் இந்தியாவிற்குச் செல்லவில்லை. பொதுவாக இலங்கையின் பாரம்பரியம் ஜனாதிபதிகள் தமது முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியா செல்வதுதான். ஆனால் ரணில் பதவிக்கு வந்த பின்னர் இந்தியாசெல்லஉடனடியாகப்பச்சைக்கொடி காட்டப்படவில்லை. இப்போதுதான் அது காட்டப்பட்டிருக்கின்றது. அதுவும்கூட இந்தியாவிற்குப் புறப்பட முன்னதாக மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களிலும் ரணில் செய்து முடிக்கவேண்டிய காரியங்கள் ஏராளம் உண்டு. பல உடன்படிக்கைகளிலும் அவர் கையெழுத்திடவேண்டியிருக்கிறது.

இந்தமுறைரணிலின்இந்தியப்பயணம் அவ்வளவுஇயல்பானதாகஇருக்காதுஎன்று சொல்லப்படுகின்றது. பலசிக்கல்களைஅவர் அங்குஎதிர்கொள்ளவேண்டிவரும்என்றும் எதிர்வுகூறப்படுகின்றது. இருந்தாலும்இந்திய அரசிடமிருந்தல்லாமல் வரும் ஒகஸ்ட் மாதமும் இந்தியா செல்வதற்கான ஒரு அழைப்புரணிலுக்குவந்திருக்கின்றது. அது இந்தியாவின் பெரும் பணக்காரர்க ☞2

## யானை தாக்கி இருவர் இறப்பு

வெவ்வேறுஇடங்களில்காட்டுயானைதாக்கி இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

பொலன்னறுவை மாவட்டம், வெலிக்கந்தையில் வியாழக்கிழமை அதிகாலை காட்டு யானை தாக்கி ஒருவர் இறந்தார்.

வெலிக்கந்தையைச்சேர்ந்த26வயதுடைய இளைஞர் வயல் காணியில் காவலுக்கு நின்ற வேளை யானை அவரைத் தாக்கியுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சடலம் அன்று பகல் வெலிக்கந்தைப் பொலிஸாரால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

அதேவேளை, மொனராகலை ☞2

# வடக்கு சர்வதேச வர்த்தக கண்காட்சி முதல் தடவையாக யாழ். நகரத்தில்



### ஒகஸ்ட் 11 முதல் 13 வரை

வடக்கு மாகாணத்தில் கைத்தொழில் துறையை விருத்தி செய்யும் நோக்கில் முதன் முறையாக 'வடக்கு சர்வதேசவர்த்தககண்காட்சி (Northern International Trade Exhibition - NITE 2023)' எதிர்வரும் ஒகஸ்ட் 11 முதல்13 வரை யாழ்ப்பாண கலாசார மண்டப வளாகத்தில் நடைபெறவுள்ளது.

கண்காட்சி தொடர்பில் விளக்கமளிக்கும்விசேடஊடக சந்திப்பு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நேற்று வியாழக்கிழமை (22) இடம்பெற்றது.

வடக்கிற்கான கைத்தொழில் துறைகள் மன்றத்தின் ஏற்பாட்டில்குறித்தகண்காட்சி நடைபெறவுள்ளது.

புதியவர்த்தகதொடர்புகள் மற்றும் எதிர்கால வர்த்தக வாய்ப்புகளைகட்டியெழுப்பும் முயற்சியாகவும்வடமாகாண கைத்தொழில்வர்த்தகவணிகங்களின் தளமாகவும் இந்த வடக்கு சர்வதேச வர்த்தக கண்காட்சி அமையுமென ஏற்பாட்டாளர்கள் ☞2

## துப்பாக்கி வெடித்து சிறுவன் உயிரிழப்பு

துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் 16 வயதுடைய சிறுவன் உயிரிழந்துள்ளார்.

அம்பன்பொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பன்வெல கெத்பஹீவ பிரதேசத்தைச்சேர்ந்த சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வயல்வெளியிலிருக்கும் குடிசையில் தனித்திருக்கும் போது குறித்த சிறுவன் துப்பாக்கியைக் கையாண்டுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வயலில் அன்றாட வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த சிறுவனின் பெற்றோர் துப்பாக்கிச்சூட்டுச் சத்தம் கேட்டதையடுத்து குடிசைக்கு விரைந்து வந்து பார்த்தபோது சிறுவன் படுகாயமடைந்துகிடந்துள்ளார்.

உடனேசிறுவன்கல்கமுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும், அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் அம்பன்பொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

## மன்னார்க் கரையில் ஒதுங்கிய முண்டம்



ந.லோகதயாளன்.

மன்னார் பேசாலை கடற்கரையில் மனித முண்டம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. அது தொடர்பில்பொலிசாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிசார் அதனை மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட தலையற்ற சடலத்தில் காணப்படும் உள் ஆடை மற்றும் இதர ஆடையின் அடிப்படையில் இந்த உடலப் பகுதி சீன நாட்டவரினுடையதாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இவ்வாறு மீட்கப்பட்ட உடல் பகுதி உடல் கூற்று ஆய்விற்காக யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# தமிழ் எம்பிக்களுடன் பேசி தொடர்ந்து தமிழரின் வளர்ச்சிக்காக உழைப்பேன்

### லண்டனில் கதைவிட்டார் ரணில் விக்கிரமசிங்க




தமிழ்ப்பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்காகத் தொடர்ந்து உழைக்கவிரும்புகின்றேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையின் கடன் நெருக்கடியைத் தீர்க்கும் வகையில்கடன்மறுசீரமைப்பு நடவடிக்கையை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துடன் முடிவுக்குக் கொண்டுவருவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்புடன் நாடு தற்போது எதிர்கொள்ளும் கடன் சுமையைத் தீர்ப்பதற்கான விரிவான மூலோபாயத் திட்டத்தை வகுப்பதாகவும், கடன் மறுசீரமைப்பு ஒரு பிரதான முன்னுரிமையாகஇருந்தாலும் முக்கியமான ☞2

## உருக்குலைந்த சடலம் வடமராட்சியில் மீட்பு

யாழ்ப்பாணம்,வல்லைப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

வல்லை - தொண்டைமானாறு வீதியில் உள்ள வெளியில் சடலம் ஒன்று காணப்படுகின்றது என வல்வெட்டித்துறை பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் பிரகாரம் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார்சடலத்தைமீட்டுள்ளனர். சடலம்அடையாளம்காணமுடி



யாத அளவுக்கு உருக்குலைந்து காணப்படுகின்ற நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### யாழ். போதனா வைத்தியசாலையில்

## விழித்திரை சத்திர சிகிச்சை நாளை முதல் தொடங்குகிறது



யாழ்.போதனா வைத்தியசாலையில் விழித்திரை சத்திர சிகிச்சைகள் நாளை முதல் ஆரம்பமாகவுள்ளதாக யாழ்.போதனா வைத்திய சாலைபணிப்பாளர்வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துஅவர்மேலும் தெரிவித்ததாவது:

விழித்திரைசத்திரசிகிச்சை ஆனதுசத்திரசிகிச்சைநிபுணர் இல்லாத காரணத்தினாலும் சத்திர சிகிச்சைக்கு தேவையான பொருட்கள் இல்லாத காரணத்தினாலும் கடந்த 2 வருடங்களாக நடைபெறவில்லை.

இந்நிலையில்தற்பொழுது விழித்திரை சத்ர சிகிச்சை நிபுணர் மருத்துவர் ஷைலா பரதன் பதில் ☞2

# பிரபாகரனின் டிஎன்ஏ சோதனை முடிவுக்கும் தேசிய பாதுகாப்பிற்கும் என்ன சம்மந்தம்?

### –முன்னாள் எம்பி. சிவாஜிலிங்கம் கொந்தளிப்பு

இறுதிப் போரின் போது தமி ழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளைபிரபாகரனுக்குஎன்ன நடந்தது என்ற விடயத்தை ஆட்சியாளர்கள் நாட்டின் தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில்மூடிமறைத்து முழுப் பொய்களைச் செல்லி வருகின்றதுஎன்றுமுன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

பிரபாகரனின் உடற்கூறாய்வு அறிக்கையை வெளியிடுவதற்கும், நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கும் என்ன சம்மந்தம் உள்ளது என்றும்அவர்மேலும்கேள்வி எழுப்பியுள்ளார்.

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்கீழ்,ஊடகவியலாளர் ஒருவரினால் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் குறித்து கேட்கப்பட்டகேள்விகளுக்குப் பதிலளிக்கநாட்டின்பாதுகாப்பு அமைச்சும் இராணுவத் தலைமையகமும் மறுப்புத் தெரிவித்தது.

இந்நிலையில் பிரபாகரன்மரபணுப்பரிசோதனைக்காக அவரின் குடும்ப உறுப்பினர்களிடம் இருந்து மாதிரிகள் பெறப்பட்டதாஎன, முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினரும், பிரபாகரனின்நெருங்கியஉறவினருமானஎம்.கே. சிவாஜிலிங்கத்தினடம் தொடர்பு கொண்டு கேட்ட போதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்விடுதலைப் ☞2

## மின்சாரம் தாக்கித் தாயும் மகனும் பரிதாபமாகச் சாவு

மின்சாரம்தாக்கித்தாயும் மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இந்தத் துயரச் சம்பவம்கொழும்புமாவட்டம், கடுவெலபிரதேசத்தில்நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

45வயதுடையதாயாரும், 22 வயதுடைய மூத்த மகனுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். வீட்டில்பழுதடைந்த குளிர்சாதனப்பெட்டியைமூத்த மகன் திருத்திக் கொண்டிருக்கும்போதுதாயார்அருகில் இருந்துள்ளார். இதன்போது மின்சாரம் தாக்கி இருவரும் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளனர்.

தந்தையும், இளைய மகனும்உறவினர்வீட்டுக்குச் சென்றிருந்தமையால் இந்த அனர்த்தத்தில் அவர்கள் சிக்கவில்லை.

எனினும், வீட்டுக்கு வந்து சம்பவத்தை நேரில் பார்த்து அதிர்ச்சியடைந்த 48 வயதுடைய தந்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

20 வயதுடைய இளைய மகனை விசாரணைக்குட்படுத்தி அவரிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ளில் ஒருவரான பிரகாஸ் நாயரின் மகளது திருமணத்திற்கான அழைப்பு அது.

பிரகாஸ் நாயர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சிக்கும் மிகவும் நெருக்கமானவர். இந்திய அரசியலில் அவரது பெயர் பெரிதாக அடிபடுவதில்லை என்றபோதும் மிகவும் அரசியல் செல்வாக்குள்ள நபர். அவரது மகளது திருமணம் என்று சொல்லப்பட்ட போதும், அது ஒரு மன்னர் வீட்டு திருமண விழாக் கோலம்என்றேதான்சொல்ல வேண்டும்.

இந்தத் திருமண விழாவிற்கு வருகைதரும்பெரும் புள்ளிகளின் பயன்பாட்டுக்காக கொச்சினில் உள்ள ஷெரட்டோன் சொகுசு விடுதியை மொத்தமாக ''புக்'' செய்திருக்கிறார் பிரகாஸ் நாயர். இரண்டு நாட்களுக்கு அந்த விடுதி நாயரால் தனது சொந்தப் பாவனைக்காகவாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது. அத்தகைய நாயர், இலங்கை அரசியலிலும் மிகவும் செல்வாக்கானவர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள்ஜனாதிபதிமகிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச, பஸில் ராஜபக்ச என்று பல அரசியல்வாதிகளுடனும் நெருக்கமான தொடர்புகளைக்கொண்டவர். முதலில் அவர் கோட்டாபய ராஜபக்ஷவுடன்தான் தொடர்பை ஏற்படுத்தினார். பின்னர்மெல்லமெல்லமற்றவர்களுடனும் உறவைப் பலப்படுத்திக்கொண்டார். அவர்களையும்கூட நாயர் இந்தத் திருமணத்திற்கு அழைத்துள்ளார்.

திருமணத்திற்காக இந்தியா வருபவர்களுக்கு விமானப்பயணச்சீட்டு,விமான நிலையத்தில் இருந்து விடுதிக்குச் செல்ல சொகுசு வாகனங்கள்,விடுதியில்முழு உணவு உள்ளிட்ட தங்குமிடவசதிஎன்றுகவனிப்போ கவனிப்பென்று கவனிக்கிறார் பிரகாஸ் நாயர். இந்தத் திருமணத்தில் இந்தியப் பிரதமர் மோடியும் கலந்துகொள்வார்.

திருமணத்திற்கு ஜனாதிபதி செல்வது பற்றிய தீர்மானம்இன்னும்எடுக்கப்படவில்லை என்றாலும் அதை அவர் தவிர்க்க மாட்டார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## மனித ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெத் வான்,தேசிய பாதுகாப்புச் சபையின் இலங்கை, நேபாளம் மற்றும் மாலைதீவுக்கான பணிப்பாளர், செனட்டின் அயலுறவுத்துறை குழு அலுவலகத்தின் மூத்த பணிநிலைப் பணிப்பாளர், அமெரிக்க காங்கிரஸின் அயலுறவுக் குழு அலுவலகத்தின் மூத்த பணிநிலை பணிப்பாளர் ஆகியோருடன் இந்தச் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

இலங்கையின்அரசியல் மற்றும்பொருளாதாரநிலைமைகள் தொடர்பில் இந்தப் பேச்சுக்களில்ஆராயப்பட்டன. சுமார்ஒருவருடத்திற்குமுன்னர் இதேபோன்று உலகத் தமிழர் பேரவையினரை அழைத்து இராஜாங்கத் திணைக்களம் நடத்திய பேச்சு இதுஎன்பதால், இந்தக் காலப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்டிருக்கக்கூடிய மாற்றங்கள், முன்னேற்றங்கள் குறித்து சந்திப்பில் தீவிரமாக ஆராயப்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் தீவிரமாக எடுக்கப்பட்டு ஒரு தசாப்தகாலத்திற்கும்அதிகமாகிவிட்ட நிலையில் அது பேரவையின் பிரதான நிகழ்ச்சி நிரலில் இருந்து ஒதுக்கப்பட்டுவிடக்கூடிய அபாயம் குறித்த தமது கவலையை உலகத் தமிழர் பேரவையினர் வெளிப்படுத்தினர்.இந்தவிடயத்தைமனித உரிமைகள் பேரவைக்குக் கொண்டுவந்ததில் அமெரிக்காவே முன்னின்று பங்காற்றியதுஎன்றவகையில் அதன் தற்போதைய நிலைப்பாடு என்ன என்பது தொடர்பிலும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த உலகளாவிய குற்றவியல் நீதிக்கான துணைச் செயலர் அம்பெத்வான்,மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம்ஒதுக்கப்படுவதற்கு அமெரிக்கா அனுமதிக்காது என்றுதெரிவித்தார்.இலங்கை மீதானகண்காணிப்புப்பொறிமுறை ஐ.நாவில் தொடர்வதை அமெரிக்கா உறுதிப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின்பொருளாதாரம் திடமான நிலையை அடைவதாயின் அங்கு அரசியல்நிலைசுமுகமானதாக இருக்கவேண்டும், அதற்கு ஈழத்தமிழர்களின்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்று உலகத் தமிழர் பேரவைப் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்புக்களில் வலியுறுத்தினர்.

இலங்கையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அரசியல் தீர்வைக் கொண்டுவருவதற்குமான எந்தவொரு முயற்சிக்கும் அமெரிக்கா தனது முழுமையான ஆதரவை வழங்கும் என்று இராஜாங்கத்திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இந்தியாவுடனான இருதரப்புச் சந்திப்புகள் எல்லாவற்றிலும் இலங்கை விவகாரமும் ஒரு பேசு பொருளாக எப்போதும் இருப்பதாகவும், இந்தியப் பிரதமரின் அமெரிக்கப் பயணத்தின் போதும் இந்த விடயங்கள் பேசப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இலங்கை அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவது அரசியல் தீர்வை நோக்கிய பயணத்திற்கான ஆக்கபூர்வமான முதல் படியாக அமையும்என்றுஅமெரிக்கா கருதுவதாகவும் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ)

## வடக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கின்றனர்.

வடக்கிற்கானகைத்தொழில் துறைகள் மன்றமானது (NCI) ஜேர்மன் நாட்டின் ஆசியபசுபிக் வியாபாரகூட்டமைப்புடன் (Asia Pasific Business Association - OAV) இணைந்து கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் பல்வேறு தொழில்சார் அபிவிருத்தித் திட்டங்களை வடக்கு மாகாணத்தில் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்குநடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக வடக்கு சர்வதேச வர்த்தக கண்காட்சியில்சிறியநடுத்தர தொழில்முயற்சியாளர்களின் அபிவிருத்திக்கானபல்வேறு வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தஜேர்மன் நாட்டின் ஆசிய பசுபிக் வியாபார கூட்டமைப்பு தயாராகவுள்ளது.

நிறுவனங்கள், வணிகர்கள்,உள்ளூர் வர்த்தகத்தில் ஆர்வமுள்ள இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் கணிசமான எண்ணிக்கையிலான பார்வையாளர்களை எதிர்பார்க்கிறோம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வடக்கிற்கானகைத்தொழில் துறைகள் மன்றத்தின் தலைவர்கனகசபைபூரணச் சந்திரன், வடக்கிற்கான கைத்தொழில் துறைகள் மன்றத்தின் துணைத்தலைவர்சங்கரப்பிள்ளைநகுலேஸ்வரன் உள்ளிட்ட குழுவினர் செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்றனர்.

## யானை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டம், படல்கும்புரை பிரதேசத்தில்வியாழக்கிழமை மாலைகாட்டுயானைதாக்கி ஒருவர் உயிரிழந்தார்.

38 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இந்தச் சம்பவத்தில் சாவடைந்துள்ளார்.

குறித்த நபர் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை முடிந்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை வீதியைக் குறுக்காகக் கடந்து சென்ற காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று சாட்சிகள் தெரிவித்தனர்.

சடலத்தை மீட்டுவைத்தியசாலையில் ஒப்படைத்த படல்கும்புரை பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையே, கிளிநொச்சி கல்மடு பகுதியில் ஒவ்வொரு நாள் இரவும் யானைகள் குடிமனைகளுக்குள் புகுந்து பயன்தரு மரங்களைத்துவம்சம்செய்து வருகின்றன என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இது தொடர்பில் வன உயிரிகள் திணைக்கத்திடமும்ஏனைய அதிகாரிகளிடமும்முறையிட்ட போதும் அவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

யானைகள் இரவில் வீட்டு வளவிற்குள் புகுந்து மரங்களை அழிக்கும்போது தாம் உயிரைக் கையில் பிடித்தபடியிருக்கவேண்டி இருக்கின்றதுஎன்றும்மக்கள் தெரிவித்தனர்.

## விழித்திரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடமையேற்றுள்ளார்.

அவர் தமது சேவையினை மக்களுக்கு வழங்கு முகமாக வாரத்துக்கு ஒரு முறை ஆறு பேர் வீதம் 100 சத்திர சிகிச்சைகளைநாளை முதல்மேற்கொள்ளஉள்ளார்.

மலேசிய அலகா நிதியதின் ( ALAKA Foundation, Malaysia) நிதிப் பங்களிப்பில் இந் நிகழ்ச்சித்திட்டமானது யாழ். போதனா வைத்தியசாலையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது- என்றார் (O3)

## பிரபாகரனின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் தலைவர் மேதகு வே.பிரபாகரன் உயிரிழந்தார் எனக் கூறப்பட்ட பின்னர், உயிரிழந்தது அவர்தான் என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவரின் உடலை தாங்கள் மரபணுப் பரிசோதனைசெய்து உறுதிப்படுத்தினோம் என்று போர் முடிந்த ஒரிரு நாட்களிலேயே இலங்கை ஆட்சியாளர்கள் அறிவித்திருந்தார்கள்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் மரபணுப்பரிசோதனைசெய்து கொள்வதற்கான வசதிகள் இருந்திருக்கவில்லை. இந்தியாவின் கைதராபாத்திலும், சிங்கப்பூர்போன்ற இடங்களிலும்தான்அந்தவசதி இருந்தாக நாங்கள் அறிந்து கொண்டோம். ஆகவே போர் முடிந்த ஒரிரு நாட்களில் மரபணுப்பரிசோதனை செய்ததாக பொய்யான தகவலை ஆட்சியாளர்கள் வெளியிட்டிருந்தார்கள்..

பிரபாகரனின் தந்தை, தயார்அல்லதுசகோதர்களான டென்மார்க்கில் உள்ள மூத்த சகோதரர், இந்தியவின்தமிழ் நாட்டில் வாழும் சகோதரி, கனடாவில் வாழும் மற்றுமொரு சகோதரி போன்றவர்களிடம்எந்தகாலகட்டத்திலும் மரபணு மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால் தந்தையாரும், தாயாரும், போர் முடிந்ததாக அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்து 3 நாட்களின் பின்னர்தான் இராணுவத்தின் பாதுகாப்பில்இருந்துவெளியே எடுக்கப்பட்டார்கள். அவர்கள் இராணுவ தடுப்பு முகாமான பலாகொடையில் இருந்த போது, அவர்களுக்கேதெரியாமல் மாதிரிகள் பெறப்பட்டதா? ஆல்லது தந்தை இறந்த பின்னர் அவரின் உடலில் இருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டதா? என்பது தெரியாது. அதேபோல வைத்தியசாலையில் இருந்தபோது அவரின் தாயாரின் மாதிரிகளும் அவருக்குத் தெரியாமலேயே பெறப்பட்டிருக்க முடியும்.

அப்படி அவர்கள் மாதிரிகளைப்பெற்றிருந்தால் பிரபாகரனின் மாதிரிகளை நாங்கள் எடுத்து வைத்திருந்தோம், அதை அவருடைய தந்தை அல்லது தாயாரின் மாதிரிகளுடன் ஒப்பிட்டு உறுதிப்படுத்தினோம் என்று செல்வதற்கும்தேசியபாதுகாப்பிற்கும் குந்தகம்என்பதற்கும் என்ன தொடர்பு உள்ளது.

இந்த ஆட்சி பச்சைப் பெய்யை சொல்லுகின்றது. ஒரு உடற்கூறாய்வு நடத்தப்படவேண்டும்என்றால், சட்ட வைத்திய அதிகாரி முன்னால்தான் நடத்தப்படமுடியும். ஆனால் அவ்வாறான ஒன்று நடந்ததாக ஆட்சியாளர்கள் இதுவரை கூறவில்லை.

அதைவிட ஒருநீதிவான் முன்னால்தான் இறப்பு விசாரணை நடைபெற வேண்டும். நீதிவான்தான் உடற்கூறாய்வு நடத்துவதற்கான உத்தரவை வழங்க வேண்டும். அவ்வாறானஎதுவும் இங்கு நடக்கவில்லை.

கருணாவையும், தயா மாஸ்டரையும் கொண்டு சென்று காட்டியவர்களுக்கு, ஒரு நீதிவானையும் சட்ட வைத்திய அதிகாரியையும், உலங்கு வானூர்தி மூலம் அழைத்துச் செல்வதற்கு என்ன தடை இருந்தது.

ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் பொய்யும், பித்தலாட்டமுமே செய்கின்றது. தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்புச் செய்வது உட்பட ஆட்சியாளர்கள் தாம் நினைத்தவற்றை செய்வதற்கு தேசியபாதுகாப்பு என்ற வார்த்தையை பயன்படுத்துகிறார்கள். அப்படித்தான் பிரபாகரனின்விடயத்தையும் மூடி மறைப்பதற்காக திட்டமிட்டு தேசிய பாதுகாப்பு என்கிறார்கள் - என்றார்.

## தமிழ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமைப்புசீர்திருத்தங்களை நிறைவு செய்வதிலேயே முக்கிய கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

கனேடிய முன்னாள் பிரதமர் ஸ்டீபன் ஹாபருடனான சந்திப்பின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

ஜூன் 19 மற்றும் 20 ஆகிய திகதிகளில் இலண்டனில் நடைபெற்ற சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் 40 ஆவது ஆண்டு விழாவின் போது இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

சுற்றுச்சூழல் சவால்கள், பொருளாதார முன்னேற்றம் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆகியவை சிக்கலான தலைப்புகளாக மாறியுள்ள தற்போதைய காலகட்டத்தில், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில்பாதுகாப்பான மற்றும்வளமானஉலகத்தை உருவாக்க எவ்வாறு ஒன்றிணைந்துசெயல்படுவது என்பது பற்றி ஆராய உலகத் தலைவர்கள் இந்த ஆண்டு ஒன்று கூடியிருந்தனர்.

ஸ்டீபன் ஹாபர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டமை,நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப அமுல்படுத்தப்பட்ட கொள்கை வேலைத்திட்டம் மற்றும் சர்வதேசநாணயநிதியத்தின் மூலம் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் என்பன தொடர்பில் விரிவாகக் கருத்துத் தெரிவித்தார்.

இலங்கையின் நிதி வாய்ப்புகளை வலுப்படுத்தி நீண்டகாலத்துக்குச் சாதகமான வர்த்தக சமநிலையை ஏற்படுத்தஎதிர்பார்ப்பதாகவும், தாராளமய பொருளாதார நெகிழ்வுக் கொள்கையை துரிதப்படுத்தல் மற்றும் முதலீடுகளை கவர்வதை நோக்காகக் கொண்டு செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

தாம் பிரதமராக இருந்த காலத்தில் மேற்கொண்ட முயற்சிகளின்அடிப்படையில் தமிழ்ப் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்காகத் தொடர்ந்து உழைக்கவிரும்புவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டமை, புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுதல் உள்ளிட்ட முக்கியமான விடயங்கள் தொடர்பில் உடன்பாடுஎட்டப்பட்டிருப்பது குறித்தும் ஜனாதிபதி இங்கு கருத்துத் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை வரையறுப்பது தொடர்பில் அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் நிலவி வந்த சர்ச்சை நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது எனவும், வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நிலவும் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

காணாமல்போனோர் அலுவலக நடவடிக்கைகள் வெற்றிகரமாகமுன்னெடுக்கப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கேள்வி:

இலங்கை எதிர்கொண்டுள்ள சவாலான நிலைமை பற்றி நான் வாசித்து அறிந்துள்ளேன். அந்த சவால்களுக்கு முகம்கொடுத்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள்தொடர்பில்உலகம் விழிப்புடன் அவதானித்துக் கொண்டிருக்கிறது?

பதில்:

கடந்தமேமற்றும்ஜூலை மாதங்களில்இலங்கைமுகம் கொடுத்திருந்தநெருக்கடியான நிலைமையை பற்றி நாம் அறிவோம். இருப்பினும் அந்த நேரத்தில் நாட்டின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்றுக்கொள்ள எவரும் முன்வரவில்லை.

2019ஆம்ஆண்டில்எமது கட்சியின் பிரதித் தலைவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. அத்தோடு 2019 தேர்தல் மிகவும் விசேடமானதாக அமைந்திருந்த்தோடு மக்கள் மாற்றம்ஒன்றைவிரும்பினர்.

நான் கூறியதை போல மிகவும் கடுமையான தோல்வியை தழுவிக் கொண்டோம். கொவிட் தொற்று பரவலுக்கு இலக்காகியிருந்த 2020 ஆம் ஆண்டிலும்ஓகஸ்ட்மாதத்தில் நாம்தேர்தலைநடத்தினோம். அதேபோல் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் இருந்தேன்.

2016 ஆம் ஆண்டில் நாம் ஆரம்பித்த வேலைத் திட்டங்களுக்கு அமைய இலங்கை அடிப்படை தன்னிறைவை அடைவதற்காக அர்பணிப்புடன் சலுகைகளை மட்டுப்படுத்துவதற்கான அவசியம் ஏற்பட்டிருந்த்து.

அதனால் 2018 ஆம் ஆண்டில் 300 மில்லியன் டொலர் என்ற அடிப்படை சேவை எம்மிடத்தில் இருந்தது. சிறிய அளவாக இருப்பினும் அந்த இலக்கை நாம் அடைந்தோம். அதனை பலப்படுத்திக்கொள்ளும் இயலுமையும் எம்மிடத்தில் காணப்பட்டது. புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் சர்வதேசநாணயநிதியத்துடனான ஒப்பந்தத்தை இரத்துச் செய்தது.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதன் பின்னர் மேலும் ஐந்துபில்லியன்டொலர்களை ஈட்டிக்கொள்வதற்கான இயலுமையும் எமக்கு கிடைத்தது.

நான் பிரதமராக இருந்த காலத்தில் ஜப்பான், இந்தியா உள்ளிட்ட ஏனைய தரப்புக்களுடன்பேசிமூன்று பில்லியன் டொலர் பெறுமதியான வேலைத்திட்டங்களை கொண்டு வந்திருந்தேன். அவை அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டன.

கடந்த வருடத்தின் மே 9ஆம்திகதிநாட்டிற்குள்பெரும் குழப்ப நிலை உருவாகியது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் 65 பேருடைய வீடுகளுக்கு தீ மூட்டப்பட்டன. அதனால் அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக நேரிட்டது.

அந்த நேரத்தில் ஆளும் தரப்பு எம்.பி ஒருவரை தொடர்புகொண்டுநான்பேசிக் கொண்டிருந்த போது அந்த நேரத்தில் என்னால் செய்ய முடிந்த உதவி என்னவென கேட்டேன். மறுதினமே ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவருக்கு அழைப்பை ஏற்படுத்தி பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு கோரியிருந்தார். அவர் அதனை மறுத்துவிட்டார்.

அதன்பின்னர்சர்வதேச நாணயநிதியம்மற்றும்உலக வங்கியிடம்செல்லுமாறுநான் ஜனாதிபதிக்கு அறிவுரை வழங்கியிருந்தேன். இந்த நிலையில்தான், அரசாங்கத்தை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறும் என்னை பிரதமராக்கி அதற்குரிய ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

அந்த தருணத்திலும் கடந்த காலங்களில் பெறப்பட்டு, செலுத்த வேண்டிய கடன் தவணை 8 பில்லியன் டொலர்களாக இருந்தது. 2022 ஏப்ரல் மாதத்தில் இலங்கை வங்குரோத்து நாடு என்று அறிவிக்கப்பட்டிருந்தது. நாம் வழமைக்கு திரும்பும் போது ஆர்பாட்டக் காரர்கள் மீண்டும் வீதியில் இறங்க ஆரம்பித்தனர். அதேபோல் ஜூலை 9 ஆம் திகதி பெருமளவானர்கள் கொழும்பில் கூடியிருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்தமையால். ஜனாதிபதி தப்பியோடி இலங்கை கடற்படையின் கப்பலொன்றில் தஞ்சம் அடைந்து உதவியை பெற்றுக்கொள்ள நேரிட்டது. அன்று மாலை கட்சித் தலைவர்கள் கூடி ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்றுதீர்மானித்தனர். அதன் பின்னர் பதில் ஜனாதிபதியாக என்னை நியமித்துவிட்டு அரசியலமைப்புக்கமைய புதியவரைநியமித்தபின்னர் பிரதமர் பதவியிலிருந்து என்னை பதவி விலகுமாறு எதிர்க்கட்சியினர் கோரினர். அந்த நேரத்தில் சில ஊடகங்களின் தூண்டுதல் காரணமாக ஆர்ப்பாட்டக் காரர்கள் சிலர் எனது வீட்டிற்கும் தீ மூட்டினர். நான் பதவி விலகிச்செல்வேன்என அவர்கள்நினைத்திருந்தனர். மறுநாள் சில தூதுவர்கள் என்னை பதவி விலகுமாறு அறிவுறுத்தினர்.

சிலர் சபாநாயகரை பதில்ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக்கொள்ளுமாறு கோரியிருந்தனர். எவ்வாறாயினும் அந்த இரு கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டன. எனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தமையால்நானும்பதவி விலகப்போவதில்லை என அறிவித்திருநதேன். பின்னர் ஜனாதிபதியை நாட்டிலிருந்து வெளியேற்றிமாலைத்தீவிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நான் அமைச்சரவையைக் கூட்டியிருந்தேன். அதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமர் அலுவலகத்தை கையகப்படுத்திய பின்னர் பாராளுமன்றத்தையும் கையகப்படுத்து முயன்றனர். சில தினங்களுக்குபின்னர்பிரதமர் அலுவலகத்திற்கு முன்பாக பெரும் பிரச்சினையொன்று ஏற்பட்டிருந்தது.

அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துமாறு உத்தரவிடும் நிலைமை எனக்கு ஏற்பட்டது. இறுதியில் பிரதமர் அலுவலகத்தையும் கையகப்படுத்தினர். பின்னர் பாராளுமன்றத்திற்கு பேரணியாக வந்தமையால் மாலை நேரத்தில் பாராளுமன்ற அமர்வுகளை நடத்த முடியாத நிலைமை காணப்படுவதாக அறிவிக்கப்பட்டபோது அந்த முயற்சிகளுக்கு எதிர்க்கட்சித் தலைவரும்ஆதரவளித்தார். பாராளுமன்றத்திற்கும் அதே நிலைமை ஏற்படாமல் பாதுகாக்க வேண்டமென இராணுவ தளபதிக்கு அறிவுறுத்தினேன்.

அவர்களிடத்திலிருக்கும் ஆயுதம் ஏந்தாத மிகச்சிறந்த இராணுவ படையணியை அவர்கள் களமிறக்கினர். அங்கு வந்த ஆர்ப்பாட்டக் காரர்களை சாதகமான முறையில் களைக்க அவர்களினால்முடிந்தது. ஆர்ப்பாட்டத்தை களைக்கச் சென்ற 24 படைவீரர்கள் காயமடைந்தனர்.

எவ்வாறாயினும் அப்போதே ஜனாதிபதியாக பதவியேற்கவேண்டும்என்ற நிலைப்பாட்டில் நான் உறுதியுடன் இருந்தேன். அப்போதிருந்த ஜனாதிபதியும் கடமைகளை பொறுப்பேற்குமாறு என்னிட்டத்தில் கேட்டுக்கொண்டதோடு பதவி விலகுவதாகவும் அறிவித்திருந்தார். இருப்பினும் நான் பதில் ஜனாதிபதியாக பதவியேற்பதை ஜனாதிபதி அலுவலகத்தை கையகப்படுத்திக் கொண்டிருந்தவர்கள் விரும்பவில்லை.

பதில் ஜனாதிபதியாக பொறுப்பேற்பதற்கு பாராளுமன்றத்தை பயன்படுத்திக் கொள்ளும்அவசியம்எனக்கு இருக்கவில்லை. பிரதம நீதியரசரின் இல்லத்தையும் பயன்படுத்தவில்லை. வீட்டின் அருகிலிருந்த விகாரைக்கு விடியற்காலையில் சென்றேன். விகாராதிபதி அங்கிருந்த பாதுகாப்புக்களையும் நீக்கியிருந்தார். பிரதம நீதியரசர் அவ்விடத்திற்கு வருகை தந்தார். அவ்விடத்திலயே எனது பதவியேற்பு நிகழ்வுகள் படம் பிடிக்கப்பட்டன.

பாராளுமன்றத்தின் ஊடாகஜனாதிபதியொருவரை தெரிவு செய்ய வேண்டியது அடுத்தகட்டநடவடிக்கையாக காணப்பட்டது. அதற்கும் எதிர்ப்புக்கள் கிளம்பின. இருப்பினும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு இடமளிக்க முடியாது என்பதை நான் அறிவுறுத்தியிருந்தேன்.

எவ்வாறாயினும்இவை எதிர்ப்பு நடவடிக்கைகள் அல்ல மாறாக இவற்றினூடாக இலங்கை பாராளுமன்றத்தையும் அரசாங்கத்தையும் ஆக்கிரமிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை நான் அறிந்துகொண்டேன்.

அதேபோல் ஆர்ப்பாட்டக் காரர்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.இருப்பினும் கைது செய்யப்பட்ட அனைவரும் நீதிவான் நீதிமன்றங்களால் விடுதலைசெய்யப்பட்டனர். ஆர்ப்பாட்டக் காரர்கள் எவரும் சிறையிடப்படவில்லை. சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் அவர்களின் பக்கமாக இருந்தமையால் அவர்களுக்கு அது வலுவாக அமைந்திருந்தது.

பாராளுமன்றத்தின் மீதான தாக்குதல்களின் போது சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய தடுப்பு உத்தரவின் கீழ் சிலர் கைது செய்யப்பட்டனர். பிரதமர் அலுவலகத்திற்குள் சென்று எவ்வாறு அதனை கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர முடியும்என்பதைஆராயுமாறு இராணுவத்தினரை அறிவுறுத்தினேன். அதன் பின்னர் ஜனாதிபதிஅலுவலகத்தையும் மாளிகையும் மீட்குமாறு கேட்டுக்கொண்டேன்.

ராஜபக்ஷவினர்களின் தலைமையிலான ஆளும் கட்சி உறுப்பினர்கள் மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்களின் ஆதரவும் கிட்டியதால் பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட தேர்தலை 135 வாக்குக்களால் வெற்றிக் கொள்ள முடிந்தது. என்னை தேர்தல் ஒன்றில் களமிறக்குவதே அவர்களின் நோக்கமாகவும் இருந்தது.

வர்த்தகர்கள், நிறுவன உரிமையாளர்கள் மற்றும் கிராமிய பிரதேசவாசிகள் உள்ளிட்ட பலரும் அமைதிகாக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒத்துழைப்பு வழங்கிமைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் என்னோடு இருக்காவிட்டாலும் சட்டம் ஒழுங்கை உறுதிப்படுத்து வேண்டும் நிலைப்பாட்டிலேயே அவர்கள் இருந்தனர்.

அதனால் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்திய பின்னர் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுப்பதற்கு அவசியமான ஏற்பாடுகளை முன்னெடுத்தோம். அதற்குரிய கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டோம்.

செப்டெம்பர் மாதத்தின் பின்னர் கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளை முன்னெடுப்பது குறித்தி நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் தொடர்பிலான உபாயமார்க்கங்கள் தொடர்பில் பாராளுமன்றம் அவதானம் செலுத்தியுள்ளது. அதேபோல் முழுநாட்டிலும்முழுமையான மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டியஅவசியம்உள்ளது.

தாராளவாத பொருளாதார கொள்கைகளின் கீழ் பெருமளவானமுதலீடுகளை இலங்கைக்குள் கொண்டு வருவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது. அதேபோல் நீண்ட கால பலன்களை அளிக்கும் வகையிலான வர்த்தகத்துறைமுதலீடுகளும்

தொடர்ச்சி 12 ம் பக்கம்

# சகல அரசியல்வாதிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் இல்லாவிடில் மக்கள் எதிர்மறையாகச் செயற்படுவார்கள்

## வெருட்டுகிறார் நீதி அமைச்சர் விஜயதாஸ



ஆசியாவில் சிறந்த ஊழல் எதிர்ப்பு சட்டம் இலங்கையில் இயற்றப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமையவே ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மக்கள் விமர்சிக்கிறார்கள். ஆகவே ஊழல்ஒழிப்புக்கு சகல அரசியல்வாதிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய செயற்படாவிட்டால் மக்கள் எதிர்மறையாக செயற்படுவார்கள், நாடாளுமன்றத்தை விமர்சிப்பார்கள்.

ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பின் முன்வைக்கப்படும் திருத்தங்களை வெளிப்படை தன்மையுடன் ஏற்றுக்கொள்வோம் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை சபைக்கு சமர்ப்பித்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றியவை வருமாறு -

ஊழல் எதிர்ப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயத்தில் இலங்கை 2004 ஆம் ஆண்டு கைச்சாத்திட்டது. இருப்பினும் 19 ஆண்டுகள் கடந்தும் ஊழல் எதிர்ப்பு சட்டம் நிறைவேற்றப்படவில்லை. 2015 ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் ஊழல் எதிர்ப்பு சட்டத்தை இயற்ற ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது. இருப்பினும் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

2022 ஆம் ஆண்டு மே மாதம் இடம்பெற்ற ஆட்சிமாற்றத்தைத் தொடர்ந்து ஊழல் எதிர்ப்பு சட்டத்தை இயற்ற தீர்மானிக்கப்பட்டது. துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளுடன் சட்டமூல தயாரிப்புக்காக விசேட குழு நியமிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூல வரைவை ஒரு தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தினார்கள். சட்டமூலத்தை உயர்நீதிமன்றம் முழுமையாக பரிசீலனை செய்து பல திருத்தங்களை முன்வைத்துள்ளது. அதே போல் எதிர்க்கட்சியினரும் திருத்தங்களை முன்வைத்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற துறைசார் மேற்பார்வை குழு வேளையின் போது முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பில் இறுதியான தீர்மானத்தை எடுக்க முடியவில்லை. இதற்கமைய சட்டமூலம் மீதான விவாதத்தை ஆரம்பித்து கட்சி தலைவர்களின் இணக்கப்பாட்டுடன் எதிர்வரும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் இரு நாள் விவாதத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசாங்கத்தில் இலஞ்ச ஊழல்ஒழிப்பு ஆணைக்குழு ஊழல்ஒழிப்பு தொடர்பான சட்டமூலத்தை தயாரித்தது. அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் ஊழல் மோசடிகளில் ஈடுபடுகிறார்கள். அவர்களைக் கண்காணிக்க உரிய வழிமுறை இல்லை என்ற நிலைப்பாடு மக்கள் மத்தியில் காணப்பட்டது. இதுவும் அக்காலப்பகுதியில் பாரிய அரசியல் நெருக்கடி ஏற்படுவதற்கு ஒரு காரணியாக அமைந்தது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லதொரு நிலைப்பாடு கிடையாது. இதன் காரணமாகவே ஊழல் எதிர்ப்பு சட்டத்தை இயற்ற வலியுறுத்தப்பட்டுள்ளது. பாரிய மாற்றத்துக்கான அம்சங்களை இந்த சட்டமூலம் கொண்டுள்ளது. ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்கள் அரசமைப்பு பேரவையின் ஊடாகவே நியமிக்கப்படுவார்கள்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு ஓய்வுபெற்ற நீதிபதிகள், பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றமை தொடர்பாக மக்கள் மத்தியில் மாறுப்பட்ட கருத்து காணப்படுகிறது. ஆகவே ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஊடாக அமைக்கப்படும் புதிய ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் 62 வயதை அண்மித்து, துறைசார் நிபுணத்துவத்தை கொண்டிருக்க வேண்டும் என்ற அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள்.

நிதி சுயாதீனம், பரிபாலனம் ஆகிய விடயங்களில் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்பட வழிமுறைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன. ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் தலைவர்கள், தூதுவர்கள், ஆளுநர்கள், அரசியல்வாதிகள் உட்பட உயர் பதவிகள் வகிக்கும் அனைவரும் தமது சொத்து விவரங்களை வெளிப்படுத்த வேண்டும்.

முன்வைக்கப்படும் சொத்து விவரங்களின் உண்மை தன்மையை ஆராய்வதற்கு தொழில்நுட்ப வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. வருடாந்தம் சொத்து விவரங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். சொத்து விவரங்களை வெளிப்படுத்தும் சட்டம் இந்த ஊழல்எதிர்ப்புசட்டத்தால் வலுப்படுத்தப்படும்.

அரச அதிகாரி ஒருவர் வருடாந்த சொத்து விவரத்தை வெளிப்படுத்தாவிடின் முதல் கட்டமாக அவரது ஒருமாத சம்பளம் ஆணைக்குழுவால் இடைநிறுத்தப்படும், அதனை தொடர்ந்து அறிக்கை சமர்ப்பிக்கபடாவிடின் அவரது ஆறு மாத கால சம்பளம் இடைநிறுத்தப்படும்,- மூன்றாவது கட்டமாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படும்.

தனியார் நிறுவனங்களின் செயற்பாடுகளும் ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. அரச அதிகாரி ஒருவர் சேவையில் இருந்து ஓய்வுபெற்றதன் பின்னரும் இரண்டாண்டு காலத்துக்கு சொத்து விவரங்களை வெளிப்படுத்த வேண்டும். அரச நிறுவனங்களில் உயர்மட்டத்தில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை கீழ்நிலை சேவையாளர்கள் வெளிப்படுத்துவதில்லை.

தகவல்களை வெளிப்படுத்துவதால் தமது தொழிலுக்கு பாதிப்பு ஏற்படும் என அவர்கள் கருதுகிறார்கள். ஆகவே, தகவல் வழங்குபவர்களின் இரகசியத்தன்மையை பாதுகாக்க இந்த சட்டமூலத்தில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பெண்கள் பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகுகிறார்கள். ஆகவே பாலியல் சீண்டல்கள், ஊழல் குற்றம் என்று இந்த சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. இந்த சட்டமூலம் தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் சாதகமான திருத்தங்களை முன்வைத்தால் அதனை வெளிப்படை தன்மையுடன் செயற்படுத்துவோம்.

ஆசியாவில் மிக சிறந்த ஊழல் எதிர்ப்பு சட்டத்தை உருவாக்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அதற்கான ஆரம்பமே இதுவாகும். நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பு எதிர்தரப்பை நோக்கி திருடன் என்பதும், எதிர்த்தரப்பு ஆளும் தரப்பை நோக்கி திருடன் என்பதும் இயல்பானது என்று மக்கள் கருதுகிறார்கள். திருடன் என்று விமர்சிக்கப்படுவதை இல்லாதொழிக்கவும், ஊழலை இல்லாதொழிக்கவும் நாடாளுமன்றத்தின் ஊடாக சட்டம் இயற்றப்பட வேண்டும். ஊழல் ஒழிப்புக்கு 225 ஆதரவு என்பதை மக்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும். மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய நாடாளுமன்றம் செயற்படாவிட்டால் மக்கள் எதிர்மறையான வழிமுறைக்கு செல்வார்கள். தவறுகளை திருத்திக் கொள்ளாவிட்டால் மக்கள் கடுமையாக விமர்சிப்பார்கள். சகல தரப்பினரது ஒத்துழைப்புடன் அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய ஊழல் எதிர்ப்பு சட்டம் இயற்றப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமைய ஊழல் எதிர்ப்பு சட்டம் இயற்றப்பட அரசாங்கம் முயற்சிக்கிறது என்று குறிப்பிடுவது அடிப்படையற்றது. நாடாளுமன்ற வரவு செலவு திட்ட அலுவலகம் ஊழலை இல்லாதொழிக்கும் நோக்கத்தில் உருவாக்கப்படவுள்ளது. - என்றார். (05)

# மக்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட பெரிய காகமே அரசைப் பாதுகாக்கிறது

## எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. சாட்டை

கபுடு கா,கா, என்று மக்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட பெரிய காகம் தான் இந்த அரசாங்கத்தைப் பாதுகாக்கிறது. மக்கள் போராட்டத்தால் சிறிது காலம் விலகி இருந்தவர்களுக்கு எதிர்வரும் நாள்களில் அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளது.

அடிப்படை கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்தாமல் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியிலும் ஆட்சியாளர்கள் பாடம் கற்றுக்கொள்ளவில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு – பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் பல முன்னேற்றகரமான சட்டங்களை இயற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்கது. இயற்றப்படும் சட்டங்கள் வெறும் காகிதங்கமாக இருப்பது பிரச்சினைக்குரியது.

சர்வதேச நாணய நிதியம்,சர்வதேசம் ஆகிய–வற்றின் அழுத்தங்களுக்கு அமையவே தற்போது சட்டமூலங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. சட்டங்களை இயற்றி விட்டோம் என சர்வதேசத்திடம் குறிப்பிட்டு விட்டு அரசாங்கம் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்கிறது. இயற்றப்படும் சட்டங்கள் ஏதும் முறையாக அமுல்படுத்தப்படுவதில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ளது. பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கை அசமந்தகரமாக செயற்படுவதாக இலங்கைக்கான மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அதிருப்தி வெளியிட்டுள்ளார். இதுவே உண்மை பாதிக்கப்பட்ட தரப்பினர் தொடர்பில் இலங்கை சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகள் ஏதும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

ஊழல் மோசடி நாடு வங்குரோத்து நிலை அடைவதற்கு பிரதான காரணியாக இருந்தது. மாசடி செய்யப்பட்ட அரச நிதி மீண்டும் அரசுடைமையாக்கப்பட வேண்டும் என மக்கள் வலியுறுத்தினார்கள். இந்த கோரிக்கை ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஊடாக நிறைவேற்றப்படுமா என்பது சந்தேகத்துக்குரியது.

கடந்த ஆண்டு நாட்டு மக்கள் கபுடு கா,கா என்று கடுமையான விமர்சனத்தை வெளிப்படுத்தினார்கள். மக்களால் வெறுக்கப்பட்ட பெரிய காகம் தான் இந்த அரசாங்கத்தை பாதுகாக்கிறது. போராட்டம் ஊடாக ஜனாதிபதி மாத்திரம் தான் பதவி விலகினார்.

ஆனால் அவருடன் இணக்கமாக செயற்பட்டவர்கள் அரசாங்கத்தில் உள்ளார்கள் மக்களால் வெறுக்கப்பட்டவர்கள் குறுகிய காலம் அமைச்சு பதவிகளில் இருந்து விலகி இருந்தார்கள். ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் அவர்களுக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளன. ஆகவே, அடிப்படை கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்தாமல் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. – என்றார். (05)

# ஊடகங்களை கட்டுப்படுத்துவதற்கான எந்தத் தேவையும் அரசுக்குக் கிடையாது

## சாந்த பண்டார கூறுகிறார்

நாட்டில் சிறந்த ஊடக ஒழுங்குபடுத்தலை மேற்கொள்வது தவிர ஊடகங்களை கட்டுப்படுத்துவதற்கான எந்த தேவையும் அரசாங்கத்திற்கு கிடையாது. மாறாக ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் முன்னுரிமையளித்து செயற்படுகிறது என ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

ஊடக ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் தொடர்பாக நிலையியற் கட்டளை 27 இன் 2கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஊடகங்களைபலப்படுத்து–வதற்கும் உண்மையான தகவல்களை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்குமே இந்த ஊடக ஒழுங்குபடுத்தல் சட்ட–மூலம் கொண்டுவரப்படவுள்ளது. அனைவரினதும் கருத்துக்கள் அதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னரே சட்ட மூலமாக்கப்படும்.

ஊடகவியலாளர்களை இலக்காகக் கொண்டு எந்த வித கட்டுப்பாடுகளையும் முன்னெடுப்பதற்கான தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது.

எமது நாட்டின் நான்காவது ஜனநாயக தூணாக ஊடகம் திகழ்கிறது. தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்துக்கு இணங்க எந்த ஓர் ஊடக நிறுவனத்தின் ஒளிபரப்பு அனுமதிப் பத்திரத்தையும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் ரத்து செய்ய முடியும். எனினும் புதிய சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் அந்த சட்டத்தில் மாற்றம் ஏற்படவுள்ளது.

மேற்படி சட்டமூலம் தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றனவே தவிர இதுவரை அது சட்ட–மூலமாக்கப்படவில்லை. அனைவரினதும் ஆலோசனைகள், கருத்துக்கள் பெறப்பட்ட பின்னரே அது சட்டமூலமாக தயாரிக்கப்படும். அது தொடர்பில் எதிர்க்கட்சி உட்பட அனைவரும் கருத்துக்களை முன்வைக்க முடியும். அது தொடர்பான ஆவணங்கள் ஊடக நிறுவனங்களின் பரிசீலனைக்காக அந்த நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அதேவேளை, அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்கு அழைத்து விரிவான பேச்சு நடத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்கவே அது தொடர்பான ஆவணங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் கேட்டுக் கொண்ட தற்கிணங்க பரிசீலனைக்காக மூன்று வார காலங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. என்றார். (05)

# ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு இரு கைகளும் உயர்த்தி ஆதரவு

## எம்.உதயகுமார் பகிரங்கம்



அரசியல் நோக்கமற்ற வகையில் இதய சுத்தியுடன் சிறந்த முறையில் ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் நிறைவேற்றப்படுமாயின் அதற்கு இரு கைகளையும் உயர்த்தி ஆதரவு வழங்கு வோம். இந்த சட்டமூலம் திருடன் கையில் சாவி கொடுத்தது போல் அமைந்து விடக்கூடாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஊழல்எதிர்ப்புசட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

ஊழல்மோசடியால்தான் இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பொருளாதார ரீதியில் தற்போது பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன. ஒருநாடு ஊழலற்ற நாடாக மாறும் போது நாடும், நாட்டு மக்களின் வாழ்க்கையும் வளம் பெறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

'இலஞ்சம் தவிர்,நெஞ்சம் நிமிர்' என்பதற்கு இணங்க நாட்டு மக்கள் அனைவரும் பொறுப்புடன் செயற்பட்டால் ஊழலை முழுமையாக இல்லாதொழிக்கலாம்.ஊழல் எதிர்ப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் சமவாய ஒப்பந்தத்தில் இலங்கை 2004 ஆம் ஆண்டு மே மாதம் கைச்சாத்திட்டது. ஆகவே, ஊழல் ஒழிப்பு தொடர்பில் இலங்கைக்கு பாரிய பொறுப்பும், கரிசனையும்,கடப்பாடும் காணப்படுகிறது. ஊழல் ஒழிப்புக்கு தேவையான சட்டங்கள் துரிதமாக இயற்றப்பட வேண்டும்.

அரசியல் நோக்கமற்ற வகையில் இதயசுத்தியுடன் சிறந்த நோக்கத்துடன் ஊழல் எதிர்ப்புச் சட்டம் நிறைவேற்றப்படுமாயின் அதற்கு இரு கைகளையும் உயர்த்தி முழுமையாக ஆதரவு வழங்குவோம். சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்துள்ள அறிவுறுத்தல்கள், சிவில் தரப்பினர், அரசியல் கட்சிகள் முன்வைத்துள்ள திருத்தங்கள் சட்ட–மூலத்தில் உள்வாங்கப்பட வேண்டும்.

ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தகவலறியும் உரிமை சட்டத்தை அப்பாற்பட்டுள்ளதாக ட்ரான்ஸ்பேரன்ஸி அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.ஆகவே இவ்விடயம் தொடர்பில் நீதியமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.அரசியல் மற்றும் தனிப்பட்ட நோக்கங்களை அடிப்படையாக கொண்டு முன்வைக்கப்படும் பொய்யான தகவல்கள் தொடர்பில் சட்டமூலத்தில் கடுமையாக ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

ஆகவே ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் திருடன் கையில் சாவி கொடுத்தது போல் அமைந்து விடக் கூடாது. நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய ஊழலுக்கு எதிராக செயற்படும் கருவியாக அமைய வேண்டும். ஊழல் ஒழிப்பு தொடர்பிலான விடயங்கள் பாடசாலை பாடத்திட்டத்துக்குள் உள்வாங்கபட வேண்டும் என்பதை கல்வி அமைச்சிடம் வலியுறுத்துகிறேன். - என்றார். (05)

# உள்ளக விசாரணைகளினால் ஒருபோதும் நீதி கிடைக்காது

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இடித்துரைப்பு

பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கை மந்தகரமாகவே செயற்படுகிறது. சுதந்திரமான விசாரணை முன்னெடுக்கப்படுவது சந்தேகத்துக்குரியது என்பதை உலக நாடுகள் இன்று ஏற்றுக்கொண்டுள்ளன.

உள்ளக விசாரணையில் ஒருபோதும் நீதி கிடைக்காது என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

தீவிரமடைந்துள்ள ஊழல் மோசடியால் இலங்கை புகழோடு வீழ்ச்சி நிலைக்கு செல்கிறது. நீதி துறையின் பாதுகாப்பு மற்றும் சுயாதீ–னத்தன்மை தொடர்பில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது.

இயற்றப்படும் சட்டங்களால் சமூக கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை அவதானிக்க வேண்டும். ஆகவே, இயற்றப்படும் சட்டங்கள் வெறும் காட்சிப் பொருளாகவே காணப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் தற்போது இடம்பெறுகிறது. பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கை மீது நம்பிக்கை கொள்ள முடியாத தன்மை காணப்படுவதாக ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வாய்மூல அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கை மந்தகரமாகவே செயற்படுகிறது. சுதந்திரமான விசாரணை முன்னெடுக்கப்படுவது சந்தேகத்துக்குரியதே என உலக நாடுகளும் இன்று ஏற்றுக்கொண்டுள்ளன. உள்ளக விசாரணையில் ஒருபோதும் நீதி கிடைக்காது என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறோம். மருதங்கேணி பகுதியில் எனக்கும், பொலிஸாருக்கும் இடையில் இடம்பெற்ற கருத்து முரண்பாடு அதனை தொடர்ந்து நான் கைது செய்யப்பட்டமை தொடர்பில் பொதுமக் கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை பாரிய சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நிறைவு பெறுவதற்கு முன்னர் அவர் பொலிஸாரை பாதுகாக்கும் வகையில் செயற்படுகிறார் என்பது தெளிவாக விளங்குகிறது. ஆகவே இவ்வாறான தன்மை முழுமையாக மாற்றமடையும் வரை ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. - என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உடன் சிந்திப்பது அவசியம்

கல்வியியல் கல்லூரிகளில் பட்டயக் கற்கையை நிறைவு செய்து ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களில் 350 பேர் வரையிலனோரே வடக்கு மாகாணத்தில் உள்ள மாகாணப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாகநியமனம்பெற்றுள்ளனர். வடக்கிலிருந்து இன்னும் அதிக எண்ணிக்கையானவர்கள் ஆசிரியர்களாகப்பணிநியமனம்பெற்றபோதும்அவர்கள் எல்லோரையும் வடக்கில் நிரந்தர நியமனம் செய்ய முடியவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கான காரணமாக, வடக்கில் போதிய வெற்றிடம் இல்லை என்பதும், வடக்கில் தொடர்ச்சியாக மாணவர்கள் எண்ணிக்கை குறைந்து வரும் நிலையில், ஆசிரியர் ஆளணியினரை மட்டும் அதிகரிக்க முடியாது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

ஈழத் தமிழ்ச் சமூகம் எதிர்கொண்டுவரும் மிகப் பெரும்அவலங்களில்ஒன்றின் குறிகாட்டியாக இதனை எடுத்துக்கொள்ள முடியும். வடக்கில் அண்மைக் காலத்தில் 194 பாடசாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் மக்கள் கிராமங்களைவிட்டு நகரங்களை நோக்கி நகரத் தொடங்கியிருப்பதும், தமிழரின் பிறப்பு வீதம் குறைந்து போயிருப்பதும்தான். பல பாடசாலைகளில் தரம் ஒன்று வகுப்புக்கு ஒரேயொரு பிள்ளைகூட அனுமதிக்கப்படாத நிலை ஏற்பட்டிருப்பதாக பிரதேசசெயலகஅதிகாரிகள்சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

ஏன் இந்த நிலை? பொருளாதாரத் தேட்டத்துக்காக வெளிநாடுகளை நோக்கி ஓடும் இளையோர், வசதிகள் வந்த பின்னரே வாழ்க்கை என்கிற கண்ணோட்டத்துடன் திருமணத்தைத் தள்ளிப்போடும் இளையோர், தவறான உணவுப் பழக்கங்களால் குழந்தைப் பேறின்மை அதிகரிப்பு, சீதனம் காரணமாக முதிர் கன்னியர்களாகக் காத்திருக்கும்பெண்கள், விவாகரத்துக்களின்அதிகரிப்பு, மது குடிக்கும் பழக்கம், போதைப் பொருள் பயன்பாடு, தற்கொலைகளின் அதிகரிப்பு என்று காரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

இவற்றையெல்லாம் தீர்ப்பதற்குத் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது உடனடி அவசியம். இலங்கை ஆட்சியாளர்கள் இவற்றில் கவனம் செலுத்தி, தீர்வு காண்பார்கள் என்று எண்ணுவது வெறும் கனவு என்பதால் தமிழ்ச் சமூகமே இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வைக் காணவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது. துரிதமாகச் செயற்படாமல் விட்டால் இருப்பதையும் விரைவில் இழந்துவிடும் நிலை ஏற்படும்.

இவற்றின் காரணமாக ஆட்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே போகும்போது தமிழர்கள் பெரு நிலப் பரப்புக்கும் அதிகாரத்துக்கும் உரிமை கோரிப் போராடுவது முரண் நிலையைத் தோற்றுவிக்கின்றது. இலங்கைபோன்ற பல்லினத்துவ நாட்டில் ஆள்களின் எண்ணிக்கை மிக முக்கியமான, ஆழமான காரணி அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கு. ஆட்கள் எண்ணிக்கை குறையக் குறைய பிரதிநிதித்துவ அரசியலிலும் கணிசமான வீழ்ச்சி ஏற்படும் என்பதால் அதிகாரத்தை மீட்பதும் தக்கவைப்பதும் எதிர்காலத்தில் கேள்விக்குறியாகிவிடும். உதாரணத்திற்குநாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவே ஒவ்வொரு ஆண்டும் மாற்றப்படுகின்றது. ஆட்களின்எண்ணிக்கைகுறையக்குறையநாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறையும்.

அப்படிக் குறையும்போது நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பவர்களின் எண்ணிக்கையும்குறையும். பிரச்சினைகளுக்குத்தீர்வு காண்பதற்கான அழுத்தம் குறையும். அடக்குமுறை அதிகரிக்கும். இந்த நிலையிலிருந்து மீள்வது குறித்து தமிழ்ச் சமூகம் உடனடியாகச் சிந்திக்கவேண்டியது அவசியம்.

# சுவற்று கீரையை வழித்து போடடி..

**என். சத்திய மூர்த்தி**





அண்மையில் வவுனியாவில் கூடி பேசிய ஐந்து கட்சி கூட்டணியினர், இனப்பிரச்சினை விடயத்தில் அரசுடனான பேச்சுவார்த்தைகளில், தமிழ் அரசு கட்சி மற்றும் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியுடன் சேர்ந்து ஒரே குரலில் ஒலிக்க முடிவு செய்துள்ளனர். இது வரவேற்கதக்க முயற்சி என்றாலும், இது இன்னமும் முயற்சி லெவலிலேயே இருக்கிறது என்பதை அனைத்து தரப்பினரும் நினைவில் கொள்ளவேண்டும்.

இவ்வாறு எச்சரிக்கை செய்வதற்கு காரணம்இருக்கிறது. அரசுடனான அடுத்த கட்ட பேச்சுவார்த்தைகளில், பிரச்சினை ரீதியாக மற்ற இரு கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாடு எடுக்குமா, என்பது ஒரு புறம். அந்த பிரச்சினைகள் குறித்து ஐந்து கட்சி கூட்டணிக்குள்ளேயே ஒருமித்த கருத்து தோன்றுமா, என்ற கேள்வி மறுபுறம். இந்த முத்தரப்பினரும் சேர்ந்து பேசுவார்களா, அப்படியானால்,



அதன் முடிவு என்னவாக இருக்கும், என்பதெல்லாம் போகபோக தெரியும்.

அந்த வகையில், ஐந்து கட்சி கூட்டணியினரின் முடிவு, மந்திரத்தால் மாங்காய் வரவழைக்கும் முயற்சியே. காரணம், இன்றளவும் பிரச்சினை ரீதியாக மொத்தம் உள்ள இந்த ஏழு கட்சிகளுக்கிடையேயும் பெரிய அளவில் வித்தியாசங்கள் இல்லை. அவ்வாறு கருத்து வித்தியாசங்கள் இருந்தாலும், அது கூடி பேசி, ஒருமித்த கருத்தை உருவாக்குவது நடைமுறை சாத்தியமே.

ஆனால், இங்கு பிரச்சினையே, அந்த ஏழு கட்சி தலைமைகளுக்கும் இடையேயான வறட்டு கௌரவம் தான். கட்சி அளவிலும், தனி நபர் அளவிலும் இந்த கௌரவ பிரச்சினை அல்லது மான பிரச்சினை இடையே நுழைந்து, குட்டையை குழப்பி வந்துள்ளது. இல்லையென்றால், இப்போது இந்த ஏழு கட்சிகளும் தனியாக தொடர்வதற்கு எந்த வித நியாயமும் காரணமும் இல்லை.

கட்சிகளில் தமிழ் அரசு, தலைவர்களில் ஒவ்வொருவரும் தமிழர் அரசியலை தங்களது தனி நபர் கௌரவ பிரச்சினையாக மாற்றி கனகாலம் ஆகிவிட்டது. இன்னமும் சொல்லப்போனால், சி.ஜீ. பொன்னம்பலம், தந்தை செல்வா ஆகியோரின் காலத்தில் தலைதூக்கிய இந்த வியாதி, அனைத்து லெவல்களிலும் பரவி உள்ளது என்பதே உண்மை. மந்திரத்தால் மாங்காய் வரவழைக்க முடிந்தாலும் முடியும், இவர்களது வறட்டு கௌரவத்தை விட்டோழிப்பது, இல்லையென்றால் அழித்தொழிப்பது, மிகமிக கடினம்.

### செல்லா காசு

ஒரு கதை சொல்வார்கள். வீட்டில் மனைவி தினமும் சாப்பாட்டிற்கு கீரையை மட்டுமே சோறு, குழம்புடன் சமைப்பாள் என்பதால் ஒரு தினம் வெறுப்டைந்த கணவன், கோபத்தில் தனது இலையில் வைக்கப்பட்ட கீரையை, எதிரே உள்ள சுவற்றில் தூக்கி அடித்தானாம். ஆனால், சாப்பிடவும் வேண்டும், வீட்டில் வேறு எந்த கறியும் கூட்டும் இல்லை.

அப்போது அவன் மனைவியிடம் இப்படி சொன்னானாம் 'சுவற்றுகீரையை வழித்து போடடி, சொரணை கெட்ட பெண்டாட்டி' என்று. இதில் உண்மையில் யார் சொரணை கெட்டவர்?

இந்த நிலை தான், ஐந்து கட்சி கூட்டணிக்கும் தோன்றி உள்ளது. ரெலோ, ப்ளொட் ஆகிய பங்காளி கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமல் தமிழ் அரசு, நடைபெறாதா உள்ளூராட்சி சபை தேர்தல்களில் தனித்து போட்டியிட முடிவு செய்தது தவறாகவே இருக்கட்டும். ஆனால், இன்றைய நிலையில், தமிழ் அரசு இல்லாமல் தாங்கள் செல்லா காசு என்று அவர்கள் முடிவு செய்துள்ளார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

இதனால் தானோ என்னவோ, மீண்டும் அனைத்து தமிழ் கட்சிகளுடன் கூட்டாக செயல்படப்போவதாக அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதே குழலை ரெலோ-வின் செல்வம் அடைக்கலநாதன் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் வாக்கில் ஊதினார். அது அனைத்து தமிழ் கட்சி களும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு பதிமூன்றாவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்த, இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற பிரச்சினை குறித்தது. அப்போது, செல்வம், தமிழ் அரசும், குறிப்பாக சம்மந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரும் தனக்கு ஒத்து ஊதவேண்டும் என்று எதிர்பார்த் தார். அதாவது, கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தனின் வயது முதிர்ச்சி மற்றும் உடல் நலம் ஆகியவற்றை காரணம் காட்டி, அவரது தலைமையை கைப்பற்றுவது தான் அப்போதைய நிகழ்ச்சிநிரல். தன்னை மட்டும் முன்னிலைபடுத்தி அரசியல் செய்ய முயன்றார். இதுவும் அவர், தசாம்சங்களாக தமிழ் அரசு தலைமையிடமிருந்து படித்துக்கொண்டது தான்.

வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்த கதையாக, அப்போதும் கடைசி காலகட்டத்தில், சம்மந்தன், செல்வம் அடைக்கலநாதனுக்கும் அவரது அரசியல் ஆலோசகர் சுரேன் குருசாமிக்கும் தலையில் குட்டு வைத்தார். எந்தவித சிரமமும் முன்னெடுப்பும் இன்றி, அவர்களை தமிழ் அரசியலின் மையபகுதியில் இருந்து மீண்டும் ஒரு முறை ஒதுக்கி தள்ளினார்.



### உடைபட்ட மூக்கு

என்ன, தமிழ் தேசிய கூட்டமைப்பின் உள்வீட்டு விளையாட்டில், மூக்கு உடை பட்டவர்கள் என்னவோ, முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீமும், மலையகத் தின் மனோ கணேசனும் தான். தமிழ் அரசுடனான தனது உள்வீட்டு, உள்நாட்டு போருக்கு, செல்வம் அவர்கள் இருவரையும் தனக்கு பக்கபலமாக அழைத்திருந்தார்.

அந்த இரு தலைவர்களும் முன்பின் யோசிக்காமல், தமிழர் கூட்டு முயற்சிக்கு தங்களாலான தார்மீக ஆதரவை அளித்தார்கள் என்று வேண்டுமென்றால் கூறலாம். ஆனால், எப்போது, சம்மந்தன் அதில் இடைபட்டாரோ, அப்போதே அவர்களுக்கு அங்கு இடமில்லை என்று ஆகிவிட்டது. அதனை அவர்களும் புரிந்து கொண்டு, நடையை கட்டினார்கள்.

தன் முயற்சியில் தளராத விக்கிரமாதித்தனாக, செல்வம்,, இப்போது அடுத்தகட்ட நகர்வுகளை முன்னனெடுத்தார். எப்போது தமிழரசு உள்ளாட்சி தேர்தலில் தனி முடிவு எடுத்து விட்டதோ, அப்போதே தமிழ் தேசிய கூட்டணியில் இருந்து அந்த கட்சி விலகிவிட்டதாகவே அர்த்தம் என்று வியாக்கியானம் கொடுத் தார். மேலும் மூன்று முன்னாள் கூட்டமைப்பு அங்கத்துவங்களையும் சேர்த்துக்கொண்டு, தங்களை ஜனநாயக தமிழ்தேசியகூட்டமைப்புஎன்றுபெயரிட்டு அழைத்துக்கொண்டார்.

அந்த கூட்டணியில், செல்வத்தின் ரெலோ கட்சியிடம் இருந்து மீண்டும் ஒரு முறை பிரிந்து சென்று தனி கட்சி துவங்கிய சிறிகாந்தா மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோரும் அடக்கம். அதுவும் தமிழர் தலைமைகளுக்கே உரிய வறட்டு கௌரவ விவகாரம் தான். இன்று நிலைமை என்னவென்றால், ஐந்து கட்சி அணியில், செல்வம் சர்வாதிகாரியாக செயல்பட செல்வம் முயற்சி செய்கிறார் என்று மற்றவர்கள் குறை கூறுகிறார்கள்.

### அறிவு திமிர்

இப்போது வேண்டுமானால், தமிழ் அரசு, உள்வீட்டு போட்டிகளில் தாங்களே, மீண்டும் ஒரு முறை வெற்றி பெற்றதாக மார்தட்டிக் கொள்ளலாம். ஆனால் இதுவா வெற்றி? இதுவும் ஒரு திரைப் படத்தில் நடிகர் விவேக் கூறியது போல, 'வாடிக்கையாளர் யாரும் இல்லாத டீ கடையின் உரிமையாளர் டீ ஆற்றுவது' போல தான். அதை விட முக்கியமான ஒரு விடயத்தை தமிழ் அரசு தலைமையும் அதன் அறிவுஜீவிகளும் புரிந்து கொள்ளவேண்டும். இன்றைய தமிழ் அரசியல் நிலபரப்பு தந்தை செல்வா மற்றும் அமிர்தலி;ங்கம் காலங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டது. விடுதலை புலிகள் அமைப்பு அதற்கு ஒரு காரணம் என்றாலும், சராசரி தமிழனின் ஆசாபாசங்கள் அதனோடு ஒட்டி பிறந்த இரட்டை குழந்தையான 'அறிவு திமிர்' தான் முக்கிய காரணம். இது முக்கியமாக யாழ்பாண தமிழர்களுக்கு பொருந்தும். யாழ்பாண வெள்ளாளர் சமூகத்தை குறிப்பிட்டு கூறலாம்.


இதனால் தான், இனப்பிரச்சினை வலுவடைந்த போதும், பின்னர் அதுவே இனப்போராக உருவெடுத்த போதும், யாழ்பாண இளைஞர்கள் மேலை நாடுகளுக்குபடையெடுத்தார்கள். அவர்கள் முதலில் கூறிய காரணம், இராணுவத்தின் அடக்குமுறை மற்றும் அரசின் சந்தேக பார்வை. பின்னர் அவர்களது பெற்றோர் சொல்லாமல் சொன்ன காரணம், விடுதலை புலிகள் அமைப்பு தங்களது பிள்ளைகளை களவெடுத்து, மூளைசலவை செய்து, போராளிகளாக மாற்றிவிடுகிறார்கள் என்று.

இவை அனைத்துமே உண்மை என்றாலும், தமிழ் இளைஞர்கள் குறிப்பாக மேலை நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி அங்கேயே தொடர்ந்து வாழ்வதற்கு காரணம், தங்களது சொந்த, குடும்ப பொருளாதார நிலைமையை வலுவடைய செய்வதற்காக தான். இதனை தமிழ் சமூகம், அரசுக்கு எதிரான அரசியலாக மட்டுமே பார்த்தாலும், அதில் வேறு ஒரு உண்மை பொதிந்துள்ளது. அதனை குறிப்பாக தமிழ் அரசு தலைவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

அதாவது, அன்று பல்வேறு காரணங்களுக்காகவும் பல்வேறு காரணங்களை கூறி நாட்டைவிட்டு வெளியேறிய தமிழர்களில் பெரும்பாலானவர்கள் யாழ்பாணத்தையோ அல்லது வட மாகாணத்தை சார்ந்தவர்களே. அவர்களில் பலரும் தத்துவார்த்த ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தமிழ் அரசு கட்சியை ஆதரித்த குடும்பங்களை சார்ந்தவர்கள். இன்று அவர்களில் பலரும், இங்குள்ள தமிழர் அரசியலை அங்கிருந்து முன்னெடுப்பவர்கள். ஆனால், இங்கு, இலங்கையில் வாக்களிக்க முடியாதவர்கள். அல்லது வாக்களிக்க வராதவர்கள்.

இந்த பின்னணியிலும் தான், தமிழ் அரசின் வாக்கு வங்கி, கடந்த சில ஆண்டுகளாக சிதைந்து வருகிறது. போதாததற்கு, முந்தைய மைத்திரி-ரணில் இரட்டை ஆட்சிக்கு குடை பிடித்ததாலும், அதிலும் குறிப்பாக பிரதமர் ரணிலை தாங்கி பிடித்ததாலும், வெறுப்படைந்த இளைய தலைமுறை வாக்காளர்களே, தமிழ் அரசு கட்சியை மேலும் புறக்கணித்தவர்கள் என்று கருத இடமிருக்கிறது. அதாவது, இன்று செல்வம் வகை யாறா பல்டி அடித்தாலும், அதன் முழு பயனும் தமிழ் அரசிற்கோ அல்லது அந்த கட்சி பங்கு பெறும் புதிய கூட்டணி ஒன்றிற்கோ கிடைத்து விடாது. மாறாக, வெளியில் நின்று வேடிக்கை பார்க்கும் வேறு சில கட்சிகளுக்கோ, அல்லது தொடர்ந்து தமிழ் தேசியம் பேசும் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸிற்கோ கூட போகலாம்.

இதில், தமிழ் அரசு மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோரின் முடிவும் கூட முக்கிய பங்கு வகிக்கும். இது தான், நிதர்சனம்.



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம்

## பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



**Tel:- 021 228 3701, 071 7354308**

**Whatsapp:- 071 7736 4308**

**No.315, Kandy Road,
Kilinochchi**




- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

### MAIN DIHES

Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style

### DESSERT

| | |
|---|---|
| Ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| Ice Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

### BEVERAGES

| | |
|---|---|
| JUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swehpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |




# மணிவாசகப் பெருமானை மனத்தில் இருத்துவோம்!



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் , ஆஸ்திரேலியா

தேனை நாடி வண்டுகள் ஓடும்.தேனைச் சுவைப்பதில் வண்டுகளுக்கு பேரானந்தம். இந்த வண்டு மற்றைய வண்டுகள் போன்றதன்று.இவ் வண்டுதிருவாதவூரில் இருந்து வந்த வண்டு. ஏனைய வண்டுகள் பல மலர்களையும் நாடிநிற்க - வாதவூர் வண்டு; வேத உபநிடதங்களை நாடி அங்கு திருவாசகம் என்னும் உயரிய தேனைப் பருகி எமக்கெல்லாம் வழங்கி இருக்கிறது.அந்த வண்டு வழங்கிய தேனான திருவா சகம் - தொட்டாலும் இனிக்கும்.கேட்டாலும் இனிக்கும். படித்தாலும் இனிக்கும்.சொல் லச் சொல்ல இனிக்கும் சொற்களால் ஆனதுதான் அந்த வாசகம் திருவாசகம் . இதனால்த்தான் திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார் என்று பலரும் வியந்து போற்றும் நிலை அமைந்து விட்டது.

திருவாதவூரில் பிறந்தபடியால் திருவாதவூரர் என்றும், மணிமணியான வார்த்தைகளை வழங்கியதால் மணிவாசகர் என்றும், அவரின் ஒவ்வொரு வார்த்தைகளும் சைவத்துக்கும் , தமிழுக்கும் மாணிக்கமாய் அமைந்தமையால் மாணிக்கவாசகர் என்றும் யாவராலும் பெருமதிப்புடன் அழைக்கப்பட்டர்.

அந்தணகுலத்தில் பிறந்து , பேராளுமை மிக்கவராய் விளங்கினார் மணிவாசகப் பெருமான் என்று அவரைப்பற்றி திரு வாதவூரடிகள் புராணம் வாயிலாக அறிகின் றோம். மணிவாசகப் பெருமானின் ஆளுமை யினை அவர் வாழ்ந்த பாண்டி நாட்டின் அரசன் - அரிமர்த்தன பாண்டியன் அகத்தில் இருத்தி அவரை தனது அரசாட்சியில் முதலமைச்சர் ஆக்கினான். அத்துடன் அவரின் ஆற்றல்களை மெச்சி தென்னவன் பிரம்மராயன் என்னும் பட்டத்தையும் வழங்கிப் பெருமைப்படுத்தி னான்.மன்னவன் இவ்வாறு பெருமைப் படுத்தினான் என்பதை

தென்னவன் பிரமராயன் என்றருள் சிறந்த நாமம்
மன்னவர் மதிக்க நல்கி வையகம் உய்வதாக
மின்னவ மணிப்பூணாடை வெண்மதிக்கவிகை தண்டு
மொன்னவர் கவிரி வேழமளித்தனன் பொருநை நாடன்

வாதவூராரினை தனது அகத்தில் ஏற்றிய மன்னவன் - மற்ற மன்னவர்களும் மதிக் கும் வண்ணம் அவருக்கு நன்மதிப்பினைக் கொடுத்தான். நவரெத்தினாலான ஆபர ணங்கள், பட்டுப்பீதாபரங்கள் , சந்திரன் போன்ற வெண் கொற்றக் குடை, முத்திலான சிவிகை, பொன்னாலான காப்பு , சாமரை, யானை என்று அளித்து ஆனந்தம் அடைந் தான். என்று வாதவூரடிகள் புராணம் சுட்டிக் காட்டி நிற்கிறது.

அதிகாரம் மிக்க பதவி, அரசனின் அன்பும் ஆதரவுமான நிலை, எதையும் செய்யும் இருப்பிடம், இவை எவையையும் வாதவூரர் உள்ளம் பெரிதாக ஏற்றுக்கொண்டதாகவே தெரியவில்லை.புகழும், ஆடம்பரங்களும் நிலையாய்இருக்கமாட்டாஎன்னும்நினைப்பால் நிலையாயிருக்கும் அப்பரம் பொருளையே அவர் நாளும் பொழுது எண்ணியபடி அமைச் சர் என்னும் பெயரில் பாண்டியன் அவையில் இருந்தார் என லாம். ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும் எண்ணமே அவருள்ளத்தில் ஆழ மாய் ஆணிவேராய் இருந்தது எனலாம்.

திரும்பெருந்துறையில் நல்ல அரேபியக் குதிரைகள் வந்திருப்பதாயும் அதனைப் பார்த்து வாங்கிவரும்படியும் திரவியங்களை அரசன் அமைச் சரான வாதவூரரிடம் கொடுக்கிறான். அமைச்சரான வாதவூரரும் குதிரைகளை வாங்குவதற்கு செல்கிறார். அங்கு அவர் குருந்தமர நிழலில் ஒரு ஆனந்தப் பேரொளியினைக் காணுகிறார்.தன் னை மறக்கிறார். தான் வந்த பணியை மறக்கிறார். அந்த ஞான ஒளியுடை மகானின் திருவடியில் சங்கமம் ஆகிறார்.

குதிரை வாங்கச் சென்ற அமைச்சர் நீண்டநாள் வராதபடியால் அரசன் தூதுவர் களை அனுப்பி நிலைமையினப் பார்த்துவருமாறு பணிக்கிறான் சென்ற தூதுவர்கள் வாதவூரரின் நிலையினை மன்னனிடம் தெரிவிக்கவே மன்னவன் அடங்காச் சினங் கொள்ளுகிறான்.சினத்தால் வாதவூரரை வதைக்கிறான். உலகினை மறந்த வாதவூ ரார் அந்தப் பரம்பொருளிடம் அடைக்கலமா கிறார்.

ஆ ண் ட வ னி ன் ஆணைப்படி - ஆவணி மூலத்தில் ஏற்கனவே ஒழுங்கு செய்த குதிரைகள் வரும் என்று அரசனால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற வாதவூரர் மொழிகின்றார். குதிரைகளும் குறிப்பிட்ட நாளில் வருகின்றன. அரசன் வாதவூரரிடம் மன் னிப்புக் கேட்கின்றான். ஆனால் வந்த குதிரைகள் அனைத்துமே அன்றிரவு நரிகளாய் மாறிவிட்டன. அரசன் ஆத்திரம் மேலோங்குகிறது. வாதவூரரை சிறையில் அடைக்கின்றான் . உயரிய பதவியைக் கொடுத்த அரசனே அவரை திரவியங்களை அபகரித்த குற்றவாளியாக்குகிறான். வாதவூரர் துன்பம் - படைத்தவனுக்குப் பொறுக் கவில்லை . வைகை ஆறு பெருக்கெடுக்கிறது. அரசன் திகைக்கிறான். பெருகிவரும் நீரைத்தடுக்க நாட்டுமக்களுக்கு அரசன் ஆணையிடுகிறான்.

பலரும் தமக்கான பங்கினை செய்கிறார்கள். ஆனால் பிட்டவைத்து பிழைப்பு நடத்தும் செம்மனச் செல்வி என்னும் மூதாட்டிக்கு உதவிட யாருமே இல்லா திருந்தது. அவ்வேளை எம்பெருமானே வேலையாளாய் வருகிறார். ஒழுங்காய் வேலை பார்க்காத காரணத்தால் அரசனின் காவலர்கள் பிரம்படிக்கு ஆளாகிறார் ஆதி அந்தமில்ல அந்த அரும்பொரும் ஜோதி !

பரம்பொருளின் முதுகில் விழுந்த அடி அரசனின் முதுகில் விழுந்தது. அனைவரின் முதுகிலும் விழுந்தது. அரசன் விழித்தான். அஞ்ஞானம் அகன்றது. வாதவூரரை விடு வித்து விழுந்து விழுந்து வணங்கினான். என்ன நல்ல கதையாக இருக்கிறதா ! வாதவூரர் வரலாற்றில் இவற்றைக் காணுகிறோம்.

கல்லால் ஒருவன் அடிக்க உடல் சிலிர்க்க
காலில் செருப்பால் ஒரு வேடன் வந்தே உதைக்க
வில்லால் ஒருவன் அடிக்க
வீசி மதுரை மாறன் பிரம்பால் அடிக்க ...
அந்த வேளை யாரை நினைத்தீரோ ... அய்யா
பெற்ற தந்தை தாய் இருந்தால் உலகத்தில் உமக்கிந்த
தாழ்வெல்லாம் வருமே அய்யா -

என்று ஒரு இறையன்பர் பாடுவதில் பிரம்படி பட்ட செய்தி எப்படி வருகிறது பாருங்கள்.

மனிதன் தெய்வத்தோடு வைக்கின்ற இணக்க மானது எப்படியாய் இருப்பினும் அது நல்லதையே நல்கும்.அடியுண்ட அரசனுக்கு நல்லறிவு பிறந்தது. வாதவூரருக்கு பல வகையில் உதவிட அரசன் முன்வந்தான். ஆனால் வாதவூரரோ தாம் துறவறத் தையே நாடுவதாகக் கூறினார். அரசனும் வாதவூரர் வழியினைப் பெருவழியென ஏற்றுக் கொண்டான்.

மனிதன் என்பவன் ஏதேனும் ஒரு துறையில் சிறந்து விளங்கும் பொழுது அத்து றைக்கு ராஜன் ஆகிறான். பாண்டிய மன்னன் அவையில் அமைச் சர் ஆனதால் வாதவூரர் புவிராஜனாகிறார். தித் திக்கும் திருவாசகத்தை அளித்த தமையால் கவி ஜாரன் ஆகிறார். அவரின் பக்தியுடை வாழ்வால் அவர் தவராஜனாகிறார். பல சிறப் புக்களைப் பெற்ற வாதவூரர் நிறைவில் நடராஜனுக்கே உரியவராய் திகழ்கிறார் எனலாம். வாதவூரர் வண்டாய் பறந்தார். அந்த வண்டு திருவாசகம் என்னும் தேன் கூட்டையும் திருக் கோவையார் என்னும் தேன் கூட்டையும் கட்டி நாமனைவரும் நாளும் பொழுதும் வேண்டிய தேனைப்பெற்று சுவைத்திட வழி சமைத்திருக்கிறது எனலாம்.

உடையாள் உந்தன் நடு இருக்கும் உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்து
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே

என்னும் வேண்டுகளை வாதவூர் வண்டு இறைவனிடம் சொல்லுகிறது.இது தெவிட் டாத் தேனாகி இனிக்கிறதல்லவா !

திருவாசகமென்னும் தேன் பருகினார் ஒரு அடியவர். அவரால் தனது உணர்வினை வெளிப் படுத்த சொற்களைத் தேடுகிறார்.அவர் தேடியதை அளிக்கிறார் பருகுவோம் வாருங்கள்....

வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்துஎன்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப் பதுவே - இப்படிச் சுவைத்தவர்தான் வள்ளல் பெருமான்.

வாதவூர் வண்டு மலர்கள்தோறும் எடுத்தவந்த தேனால் ஆக்கப்பட்ட திருவாசக த்தை தமிழர்களாகிய நாம் மட்டும் சுவைத்து மகிழ்வது பெருமைதான்.

ஆனால் தமிழ் அறியா ஒருவர், எங்கள் சைவம் சாரா ஒருவர், அதுவும் ஆசிய நாட்டைச் சேராத ஒருவர்,ஆங்கில நாட்டை சேர்ந்த ஒருவர் கிறீத்தவ பாதிரியாரானவர் திரு வாசகமென்னும் தேனைத் தொட்டதும் தன்னை மறந்தார். அந்தத் தேன்கூட்டுக் குள்ளேயே புகுந்து தேனை மாந்திக் கொண்டே இருந்தார் என்பது மனமிருத்த வேண்டிய கருத்தல்லவா !

சிவனை முழுமுதற் கடவுளாகப் பாடி உருகிடும் திருவாசகம் என்னும் தேன் - ஒரு கிறிஸ்தவ அருட் தந்தையை எப்படிக் கவரமுடியும்? இது ஒரு முரண்பட்ட நிலை யாகத் தெரிகிறது அல்லவா ! இறைவன் என்பவன் ஒருவனே. திருவாசகத்தில் சிவனாக காட்சியளிக்கும் ஆண்டவன்தான்- பரமண்டலத்தில் வீற்றிருக்கும் பிதா வாக கிறீத்தவ அருட்தந்தை ஜி.யூ போப் அவர்களின் உள்ளத்தில் பதிந்திருக் கலாம்.

இதனால் அவர் ஆங்கிலத்தில் திருவாசகத்தேனை மொழிபெயர்த்து அனை வருமே பயனுறச் செய்தார் எனலாம்.

இலண்டன் மாநகரில் கிறீத்தவ தேவாலயத்தில் முழந் தாளிட்டு செபம் செய்யும் வேளை தன்னருகில் மாணிக்கவாசகரும் செபம் செய்வ தாக தான் உணர்ந்ததை - திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்பு நூலில் பதிவிட் டுள்ளார் என்பது மனங்கொள்ளத் தக்கதாகும்.இதுவே சமயங்கடந்த பக்தி நிலை எனலாம்.இதனை வாதவூர் வண்டின் ' திருவாசகம் என்னும் தேன் ' செய்திருக்கிறது.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான்தாள் வாழ்க
கோகழியாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் ஆனெகன் இறைவனடி வாழ்க

என்று இறைவனுக்கு வாழ்த்துக் கூறிய வாதவூர் வண்டினை நாமனைவரும் மனத் தினில் இருத்துவோம். இருத்தினால் ......

தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீங்கும் ! அல்லல் அறுபடும் ! ஆனந்தம் பெருகும் ! அத்துடன் மருவா நெறியும் அளிக்கும் !

அருள்வாத வூர்சொல அம்பலவர் தாமெழுதும்
திருவா சகத்தைத் தெளிந்தால் - கருவாம்
பவகதியும் நீங்கிப் பரமரரு ளால
சிவகதியும் உண்டாம் சிவம்

# வாழ்வின் வெற்றிக்கு வழிகாட்டும் கல்வி

கற்கும்போது கசப்பாகவும் கற்ற பின் கரும்பு போல் சுவையாக இருப்பது கல்வி. மாந்தர்கள் ஆகிய எம்மை பீடித் துள்ள அச்சங்களை போக்கி மடமைகளையும் பேதைமை களையும் வேரொடு தகர்த்து எறிந்து அழிக்கும் ஓர் சக்தி மிகுந்த ஆயுதம் கல்வி. ஒருவருடைய அறிவுக்கண்ணை திறக்கும் திறவுகோலாக கல்வி சிறப்பிக்கப்படுகின்றது.

ஒருவனிடம் எந்தவிதமாக அனைத்து செல்வங்கள் நிறைந்துள்ள போதும் அச்செல்வங்கள் கல்விச் செல்வத் திற்கு இணையாக அமையாது இருப்பதோடு கல்விச் செல்வமே அனைத்து செல்வங்களிலும் இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது. இதனை வெளிப்படுத்தும் முக மாக, கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றையவை எனும் குறள்பாக்கள் வெளிப்படுத்துகின்றன. சிறந்த முறையில் கற்று தேர்ந்த ஒருவன் அரசனிலும் பார்க்க சிறப்புடையவனாவான்.

மன்னனும் மாசற கற்றோனும் சீர்தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையோன் மன்னனிற்கு தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோனிற்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு எனும் மூதுரைப் பாடல் அடிகள் பறைசாற்றுகின்றன. அதாவது ஒரு நாட்டின் மன்னனானவன் எந்த தேசத்தை ஆட்சி புரிகின்றானோ அத் தேசத்திலேயே அவனுக்கான புகழும் மதிப்பும் நிறைந்திருக்கும். இருப்பினும் நன்கு கற்றுத் தேர்ந்த கற்றறிந்த ஒருவனுக்கு அவன் செவ்கின்ற தேசத்தில் அவனுக்காக புகழ் மாலைகள் அவன் கழுத்தை அலங்கரிக்க காத்துக்கொண்டிருக்கும். இதிலிருந்து கல்வி கற்ற ஒருவனின் சிறப்பும் கல்வியின் மகிமையும் எடுத்துக் காட்டப்படுகின்றது. படிக்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே மேல் என்றார் பேரறிஞர் பிளேட்டோ. இது மட்டுமின்றி கற்காமல் இருப்பவர்கள் மட்டும் அன்றி கற்பதற்கான வாய்ப்புக்கள் நிறைந்திருந்த வேலையிலும் கல்விச் செல்வத்தை அடைந்து கொள்ள விளையாதவர்களை விலங்குகள் என்கின்றாஜ். வள்ளுவர் பெருந்தகை. கல்வி கண் போன்றது கல்வியை பெறாதாதவர்கள் கண்ணிருந்தும் பார்வை இழந்தவர்களாக கருதப்படுவார். இதனை அனைத்து மூடர்களிற்கும் உணர்த்தும் முகமாவ ஒரு படி மேலே சென்று கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர் என கற்காதோரை திருவள்ளுவர் இழிவுபடுத்துகின்றார். அதாவது இரு கண்களை கொண்டவர்களாக கருதப்படுவார். யாரெனின் கல்வி கற்றவர் யாரெனில் கல்வி கற்றவர்கலே அதற்கு மாறாக கல்வி கற்று தேறாத கல்வி கற்காதவர் தங்களின் இரு கண்களுக்கு பதிலாக புண்களை கொண் டவர்களாகவே கருதப்படுவார்.

மட்டுமன்றி கல்வி கற்றவரின் சிறப்பையும் கல்வி கல்லாதவரின் இழிவையும் ஒப்பிடும் வேளையில் நெருப்பில் வாட்டினும் வளைய வேண்டுமென்பதற்காக வளைகின்ற மூங்கிலோ அரசன் அமரும் பல்லக்கில் அவனது முடிக்கு மேலே நின்று பெருமை கொள்ளும்.நீண்டு உயர்ந்து வளரும் மூங்கிலோ கலைக்கூத்தாடிகளின் கையகப்பட்டு புவியெல்லாம் அலைந்து திரிந்து அவர்களினது கால்களில் மிதியுண்டு தன் வாழ்நாளை கழிக்கும் என்ற அறக்கருத்தை

**வருத்தவன் வேய அரசன் மாமுடியின் மேலாம்**
**வருத்தாத மூங்கில் தரித்திரமாய்**
**வேழுமர் கையகப்பட்டு மாதினியெல்லாம் திரிந்து**
**தாழுமவர் தம்மடிக் கீழ் தானே**

என்ற நீதிவெண்பா வெளிப்படுத்தி கற்றோரின் சிறப்பை போற்றுகின்றது. தமிழ்ச் சமூகத்தின் சிறப்புமிக்க மனிதராக புகழ் பெற்று காணப்படும்.

**ஔவையார் அவர்கள் கல்வியின் அவசியத்தை**

**கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே**

என்னும் பாடலடிகளினூடாக பறைசாற்றுகின்றார்கள். அதாவது எவ்வளவு கடினப்பட்டாவது உடலை வருத்தியோ, மனதை வருத்தியோ கல்வியை பெறவேண்டும் என்னும் கருத்து தொன்றுதொட்டு காணப்பட்டமைக்கு இதுவே சிறந்த ஆதாரமாக கொள்ளப்படுகின்றது. மேலும் ஔவையாரின் கருத்தை உறுதிப்படுத்தும் விதமாக தென்னாபிரிக்காவில் ஜனாதிபதியாக இருந்த நெல்சன் மண்டேலோ இன்றைய உலகை மாற்றக் கூடிய ஓர் ஆயுதம் உள்ளது. அதன் பெயர் கல்வி என்றார். அத்தோடு பாரததேசத்து பதினொராவது தலைவராகிய அப்துல் கலாம் அவர்கள் படிப்பால் தான் பாரதத்தை பாராள செய்யலாம் என்றார். அதுமட்டுமன்றி பாரததேசத்திற்கு சுகந்திரம் பெற்றுக்கொடுத்த தந்தையா கிய மகாத்மா காந்தி இவ்வுலகில் அமைதியைக்காண வேண்டுமெனின் சிறுவர்களிற்கு கல்விபுகட்ட வேண்டும் என்றார்.

இவ்வாறு அனைத்து அறிஞர்களாலும், அனைத்து புகழ் பெற்ற சாதனையாளர்களாலும் கல்வியாகிய அழிவற்ற செல்வம் பற்றிய கருத்துக்கள் வெளியிடப்படுவதற்கான காரணத்தை விவேக சிந்தாமணி,

**வெள்ளத்தால் போகாது**
**வெந்தணலால் வேகாது வேந்தரால்**
**கொள்ளவும் முடியாது கொடுத்தாலும்**

நிறைவன்றி குறைவுறாது எனும் வரிகளினூடாக வெளிப்படுத்துகிறது. கல்வியானது ஒரு சாமானியனையும் உலகம் போற்றும் சாதனையாளர்களாக வெளிக் கொணர உதவி புரிகிறது. அதன்படி கல்வியின் விந்தையால் உலகம் போற்றும் பல்வேறு சாதனையாளர்கள் வடிவம் பெற்றுள்ளனர். அவர்களுள் சாக்கிரட்டீஸ், அப்துல்கலாம், பிளேட்டோ, அம்பேத்கர், அரிஸ்ரோட்டல், ஆபிரகாம்லிங்கன் முதலியோர் முதன்மை பெற்றவர்களாவர்.

உலகின் முதலாவது தத்துவஞானியான சாக்கிரட்டீஸ் நஞ்சூட்டப்படும்வரை புத்தகம் படித்துக்கொண்டிருந்தார். அவர் கல்வி மீது கொண்ட அன்பே அவரை சிறந்த தத்துவஞானி ஆக்கியது. அதுமட்டுமன்றி அப்துல்கலாம் அவர்கள் விஞ்ஞானக் கல்வி மீது கொண்ட அதிக ஆர்வமும் ஈடுபாடலும் தான் அவரை உலகம் போற்றும் மாமனிதனாக உருவெடுக்கச் செய்தது. தமிழ்ச் சமூகத்தின் சிறந்த பெண்மணியாகிய ஔவையார் தழிழ்ச் சமூகத்தில் தலைசிறந்து விளங்கக் காரணம் தழிழ் மீது அவர் கொண்ட புலமையே ஆகும்.

ஆதலால் அனைத்து சாதனையாளர்களும் சாதனையா ளர்களாக உருவெடுக்க கல்வியே பங்களிப்பு செய்கிறது எனலாம். ஆதலால் தான் முன்னோர்களும் பெரியவர்களும் சிறுவயதிலிருந்தே சிறார்களிற்கும் இளமையில் கல்வி சிலையில் எழுத்து எனும் ஆத்திசூடி வாக்கியத்தை அவர்களின் உயிர் மூச்சாக்குகின்றனர். கற்க கசடற கற்றவை கற்ற பின் நிற்க அதற்குத் தக என்னும் திருவள்ளுவரின் கூற்றிற்கிணங்க கல்வியை வெறும் மேம் போக்காக கற்காது நன்கு ஆழ மாக கற்று நாம் கற்றுத் தேர்ந்த கல்வியின் அறத்திற்கேற்ப வாழ்வியல் கருமங்களை ஆற்றும் பொருட்டு கல்வியை ஐயந்திரிபுறக்கற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்து வாழ்வில் மேன்மை அடைவோமாக.

**ரஷிதா குமாரசிங்கம்**
யா/சுண்டிக்குளி மகளிர்
உயர்தர பாடசாலை

காலைக்கதிர் Kalaikkathir

# தனது மகளுக்கு பாடசாலை அனுமதி கேட்டு ஜனாதிபதி செயலகம் முன் தாய் போராட்டம்







எனது பிள்ளையை பெரிய பாடசாலைகளில் இணைத்துகொள்ள வேண்டாம் ஒரு சிறிய பாடசாலையிலாவது சேர்த்துக் கொண்டால் போதும் என்று இலங்கையில் ஒரு தாய் தனது பிள்ளையை தோளில் சுமந்தவாறு ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் கவனத்தை ஈர்த்துள்ளது.

இலங்கையின் ராஜாங்கனை பிரதேசத்தைச் சேர்ந்த தாய் ஒருவரே ஜனாதிபதிசெயலகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். நாட்டில் இயற்றப்பட்ட சட்டமொன்றைக் காரணங்காட்டி எனது பிள்ளையை பெரிய பாடசாலைகளில் இணைத்துக்கொள்ள மறுக்கிறார்கள் என்றும், எனது பிள்ளையை பாடசாலையில் இணைத்தால் தங்களது பிள்ளையை பாடசாலைக்கு அனுப்பமாட்டோம் என அந்த பாடசாலையில் உள்ள மாணவர்களின் தாய்மார்கள் கூறுகிறார்கள்.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்துக்கும் பாடசாலையின் அதிபருக்கும் அறிவித்துள்ளார்கள். இதனால், பிள்ளையை பாடசாலையில் சேர்த்துக்கொள்ள அதிபர் மறுக்கிறார் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட தாய் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்ட தாயை ஜனாதிபதி செயலகத்துக்குள் அழைத்துச் செல்வதாகவும், ஆனால் கையிலிருக்கும் பதாகையை எடுத்துக் கொண்டு உள்ளே செல்ல முடியாது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நான் வந்தால் கையிலிருக்கும் பதாகையுடனேயே வருவேன் என தாய் திட்டவட்டமாகக் கூறுனார்.

தோளில் இருக்கும் பிள்ளையைக் கீழே இறக்குங்கள் என பொலிஸார் கேட்டுக்கொண்டதற்கும், பிள்ளையை வயிற்றில் சுமக்க முடியும் என்றால் தோளில் சுமக்க முடியாதா? என்னைக் கைது செய்து அழைத்து செல்ல முயற்சித்தால் பிள்ளையுடன் வாகனத்தின் மீது பாய்ந்துவிடுவேன் எனவும் அந்தத் தாய் எச்சரித்தார்.

(05)

# தரம்பெற்ற அதிபர்கள் சங்கத்தின் வடக்கு மாகாண சம்மேளன கூட்டம்







தரம்பெற்ற அதிபர் சங்கத்தின் வடக்கு மாகாண சம்மேளனக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் லயன் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சங்கத்தின் பொதுச் செயலாளர் நிமால் முதுன்கொட்டுவ, உப செயலாளர் அஹமட் ராஜீ, ஊவா மாகாண தரம் பெற்ற அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் நிலங்க கேவகே, தேசிய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் விஜயதாஸ திசாநாயக்க, திருகோணமலை மாவட்ட தரம் பெற்ற அதிபர்கள் சங்கத்தின் இணைப்பாளர் விஜேசிங்க முதாநாயக்க, மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எம்.மாகாத் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டர்.

மேற்படி கூட்டத்தில் அதிபர்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் முக்கியத்துவம் வாய்ந்த பிரகடணங்களும் எடுக்கப்பட்டன.

சம்மேளனக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட பிரகடனங்களாவன -

ஆசிரியர் சேவையில் இருந்து அதிபர் சேவைக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் முறையான வகையில் நடைபெறுகின்ற சம்பள ஏற்ற வேகத்தை மாற்றி உயர்ந்த சம்பள உரிமையை பெற்று கொள்ள ஜி.பி.ஏ. சம்பள ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல். அந்த முயற்சி வெற்றியளிக்காத பட்சத்தில் நீதிமன்றத்தினூடாக பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்.

பேராசிரியர் குணபால நாணயக்கார குழுவால் அதிபர் சேவையின் அனைத்து உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவு உயர்த்துவதை செய்யாவிட்டால் பேச்சு மூலம் ஜனநாயக ரீதியான தீர்வுக்கு வரவேண்டும். அதற்காக சங்கத்தின் தலைமைத்துவத்துக்கு அதிகாரத்தை வழுங்குதல்.

அதிபர் சேவை 2 இலிருந்து 1இற்கு பதவி உயர்வு பெறுகின்றபோது சம்பளம் குறைவதை தவிர்ப்பதற்காக மேலும் நடவடிக்கை எடுத்தல்.

பதவிநிலை உத்தியோகத்தர் சேவைக்கு உரிய வரப்பிரசாதங்கள் மற்றும் கொடுப்பனவுகளை வெற்றி கொள்ளவற்கு அடுத்த மூன்று மாதங்களில் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுதல்.

ஏனைய பொதுவான பிரச்சினைகளைத் தீர்த்து கொள்வதற்கு புதிய அதிபர் சேவை பிரமாணக்குறிப்பினை உருவாக்குவதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுத்தல்.

சங்கத்தின் நிறைவேற்று குழுவில் பிரதிநிதித்துவத்துக்கு அனைத்து மாகாணத்திலிருந்தும் ஒருவருக்காவது சந்தர்ப்பமளிக்கும் வகையில் சங்கத்தின் யாப்பில் திருத்தத்தை மேற்கொள்ளுதல்.

அடுத்த பதவிகள் மாற்றத்தின் போது சங்கத்தின் தலைமைத்துவத்தில் மாற்றம் கொண்டு வராதிருத்தல்.

சங்கத்தின் செயற்பாடுகளை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லும் வகையில் ஒழுங்குகளை மேற்கொள் ளல்.

மாகாண அதிபர் இடமாற்றக் கொள்கைகள் மாற்றுவதற்கு தரம் பெற்ற அதிபர்கள் சங்கம் தற்போது முன்னெடுத்துள்ள நடவடிக்கையை வரவேற்பதோடு அதனை மேலும் பலப்படுத்தி அதிபர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தல் வேண்டும்.

பல நூற்றுக்கணக்கான வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அதிபர்கள் கலந்துகொண்டமை மற்றும் வடக்கில் நடைபெற்ற மிகப்பெரிய அதிபர் தொழிற்சங்க கூட்டமாக இந்தக் கூட்டம் விளங்கியமை சங்கத்தின் பலத்தை எடுத்துகாட்டியதாக பலரும் தெரிவித்தனர்.

(05)

# இராணுவ பஸ் மோதி 3 வயது சிறுமி தலை சிதைவடைந்து பரிதாபச் சாவு

## தாய் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

இரணுவத்தினர் பயணித்த பஸ் ஒன்று, ஸ்கூட்டர் ஒன்றுடன் மோதியதில் ஸ்கூட்டரில் பயணித்த மூன்று வயது சிறுமி தலை சிதைவடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அவரின் தாயார் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சோக சம்பவம் பண்டாரகம பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது என்று பண்டாரகம பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரகம கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான காரியாலயத்தின் கணக்காளரான உயிரிழந்த சிறுமியின் தாயார், சிறுமியுடன் ஸ்கூட்டரில் அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்த போது, பண்டாரகம கூட்டுறவுச் சங்க அலுவலகத்துக்கு முன்பாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் குறிப் பிட்டனர்.

களுத்துறையில் இருந்து இராணுவத் தலைமையகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் பண்டாரகமவில் இருந்து கெஸ்பேவ நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோதே இவ்விபத்து நேர்ந்துள் ளது என்று பொலிஸ் விசாரணைகளின் போது தெரிய-வந்துள்ளது.

விபத்தையடுத்து சிறுமியும் அவரது தாயாரும் பண்டாரகம மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் எனவும், எனினும் சிறுமி தலை சிதைவடைந்து ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் எனவும் வைத்தியசாலைவட்டாரங்கள் தெரிவித்தன.

# வெல்லாவெளி விபத்தில் இளைஞர் ஒருவர் இறப்பு

மட்டக்களப்பில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இந்தவிபத்து நேற்று அதிகாலை மட்டக்களப்பு - வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைகட்டியவெளி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார்சைக்கிளில் ஆலயம் ஒன்றுக்குச் சென்றுவிட்டுத்திரும்பிக்கொண்டிருந்தவர்களே இந்த விபத்தில் சிக்கியுள்ளனர் என்று வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது 35ஆம் கொலனி, பக்கியல்ல பகுதியைச் சேர்ந்த சச்சி என்னும் 19 வயது இளைஞர் உயிரிழந்துள்ளதுடன், அதே பகுதியைச் சேர்ந்த ச.லோஜன் என்னும் 23 வய-துடைய இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

இருவரும் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், சச்சி எனும் இளைஞர் உயிரிழந்துள்ளார்.

லோஜன் எனும் இளைஞர் படுகாயமடைந்திருந்த நிலையில், மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தலைமன்னாரில் கடற்படைச் சிப்பாய் சடலமாக மீட்பு!

கடற்படைச் சிப்பாய் ஒருவர் படுக்கையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தலைமன்னார், ஊருமலை கடற்படை முகாமில் கடமையாற்றிய சிப்பாயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதனைத் தலைமன்னார் தலைமையகப் பொலிஸார் உறுதி செய்-துள்ளனர்.

கோனாபினுவல பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய தினேஷ் மதுஷான் ஜயசேகர என்ற கடற்படை சிப்பாயே உயிரிழந்துள்ளார்.

குறித்த சிப்பாய் வியாழக் கிழமை காலை பணிக்கு வராததால், அதிகாரிகள் அவருடன் பேசுவதற்காக அவர் தூங்கிக்கொண்டிருந்த இடத்துக்குச் சென்றனர்.

இதன்போது அவர் எழுந்திருக்காததால், அவரைப் பரிசோதித்த போது, அவர் இறந்து கிடந்ததைக் கண்டு பொலி-ஸாருக்கு அதிகாரிகள் அறிவிதித்தனர்.

# படியில் இருந்து தவறி விழுந்து இரண்டு வயது குழந்தை சாவு



*படியில் இருந்து தவறி விழுந்து இரண்டு வயது குழந்தையொன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.*

*தம்பகல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடுல்ல பிரதேச சபை விளையாட்டு மைதானத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற கொண்டாட்ட நிகழ்வின் போது, மரணக் கிணற்றின் படியில் இருந்து தவறி விழுந்தே குறித்த குழந்தை உயிரிழந்துள்ளது.*

*கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த குழந்தை பலத்த காயங்களுடன் மொனராகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளது.*

*மரணக் கிணற்றின் உரிமையாளரின் லொறிச் சாரதியின் குழந்தையே இவ்வாறு படிக்கட்டில் ஏறும் போது கீழே விழுந்தது.*

*நிகழ்ச்சிக்கு முன்ஞாகமரணக்கிணற்றின் பாதுகாப்பு மற்றும் அலங்காரத்துக்காகக் குழந்தையின் தந்தை வந்திருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று விசாரணைகளில் தெரிய-வந்துள்ளது.*


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
140-160 KM
80-85 KM
70-75 KM
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2
3

காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழர் வாழும் பிரதேசங்களில் விகாரைகள் கட்டுவதையே தமிழர்கள் எதிர்க்கின்றனர்!

## அருட் தந்தை சக்திவேல் சுட்டிக்காட்டு



தமிழர்கள் மட்டும் வசிக்கும் பிரதேசங்களில் விகாரைகளையும், தூபிகளையும் கட்டுவதையே தமிழர்கள் எதிர்க்கின்றனர் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தைமா.சக்திவேல்தெரிவித்துள்ளார்.

அவர்வியாழக்கிழமைவெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

தெற்கில் தமிழர்களுக்கு எதிரான இனவாதக்கருத்துக்களைக் கக்குவதற்கும் அதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும்அமைச்சும்,அமைச்சர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்களோ என்று சிந்திக்கத் தோன்றுகின்றது.

மீண்டும் மீண்டும் தமிழர்களுக்கு எதிராக, தமிழர்களின் அரசியலுக்கு எதிராக, மரபுரிமை சார்ந்த தமிழர்களின் கொள்கைக்கு எதிராக கருத்துக்கள் வெளிப்படும் நிலையில் தற்போது அரசு சார்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் 'பௌத்தர்களின் எழுச்சியை அடக்க முடியாது. பிரபாகரன் போன்று செயல்பட வேண்டாம். தெற்கில் தமிழர்கள் சுதந்திரமாக வாழ்கிறார்கள். வடக்கு தமிழர்களால் பௌத்தர்களுக்கு ஆபத்து வந்துவிட்டது எனக்கூறிதெற்கின்சிங்களபௌத்தர்களை உசுப்பேத்தி விடும் செயற்பாட்டில் இறங்கியுள்ளார்.

இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும். தமிழர்களுக்கு எதிரான அடுத்த வன்முறையை குருந்தூர் மலையிலா? திரியாயிலா? அல்லது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூற்றுகளில் இருந்தா? ஆரம்பிப்பது எனயோசிப்பது போல் தோன்றுகின்றது.

இத்தகைய வன்முறையை தூண்டும் கருத்துக்களை அரசு தரப்பினரோ, எதிரணியில் தமிழர்கள் அல்லாத எவரும் கண்டிக்கவும்இல்லை.சமயஅமைப்புகளும் இவ்வாறான கருத்துக்களுக்கு மௌனம் காப்பது இவர்களும் இதனை ஆதரிக்கின்றார்களோ? என்று கேட்கவும் வைக்கின்றது.

யுத்த காலத்தில் ஆயுதப்படைகள் தமிழர்களின் பூமியை ஆக்கிரமித்தது போன்று ஆயுதம் மௌனிக்கப்பட்ட நிலையில் சிங்கள பௌத்த கருத்தியல் கொண்ட வனஜீவராசிகள் திணைக்களம், வனவள பாதுகாப்பு திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என்பன ஆக்கிரமிப்பு வேலைகளைத் தீவிரப்படுத்தியிருப்பதோடு தமிழர் தாயகத்தில் காணப்படும் தொல்லியல் பெறுமதி வாய்ந்த இடங்களை எல்லாம் சிங்கள பௌத்தருக்கு சொந்தமான எனக்கூறி தமிழர் மரபுரிமையை மறுத்து சிங்கள பௌத்தத்தை நிலைநாட்ட முனைவது தமிழர்களையும் கொதிநிலைக்குத் தொடர்ந்து தள்ளுகின்ற செயற்பாடாகும்.

அத்தோடு குருந்தூர் மலை 'சைவர்களுக்கும், தமிழ் பௌத்தர்களுக்கும் சொந்தமானது' என்பதை ஏற்றுக் கொள்ள மறுத்து குருந்தூர் விகாரை எனக் கூறி சிங்கள பௌத்தர்களை அணி திரட்ட திட்டமிடுவதோடு, நீதிமன்ற கட்டளையை மீறி இராணுவத்தினரின் துணையோடு விகாரை கட்டுவதையும், தமிழர்கள் அங்கீகரிக்கும் சர்வதேச தொல்லியல் ஆராய்ச்சி நிபுணர்களை சேர்ந்து ஆராய்ச்சி பணியை மேற்கொள்ள எந்த முயற்சியையும் மேற்கொள்ளாதது மட்டுமல்ல, யாழ்ப்பாண பல்கலைக்கழக துறைசார் பேராசிரியர்கள், மாணவர்களை சேர்ந்து தொல்லியல் ஆய்வுகளை நடத்த அனுமதிக்காது தமிழர் மரபுரிமையை இருட்டடிப்பு செய்ய நினைப்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

தமிழர்கள் 'உண்மையான பௌத்தத்துக்கும், சிங்களவர்களுக்கும், வேறு எந்த மதத்தவர்களுக்கும் எதிரானவர்கள் அல்ல' என திரும்பத் திரும்ப கூறினாலும் அது செவிடன் காதில் ஊதிய சங்கு ஆகவே உள்ளது. தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்வதையும், பௌத்தர்கள் இல்லாத இடங்களில் பௌத்த சின்னங்கள் வைப்பதையும், தமிழர்கள் மட்டும் வசிக்கும் பிரதேசங்களில் விகாரைகளையும், தூபிகளையும் கட்டுவதையுமே தமிழர்கள் எதிர்க்கின்றனர்.

மேலும் புராதன கால சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களில் தமிழ் மன்னர்களின் ஆட்சி காலத்தில் கட்டிய சைவ கோயில்கள் உள்ளன. அங்கு அகழ்வாராய்ச்சிசெய்துகாணப்படும்தமிழர் மரபுரிமைகளையும், ஏனைய தொல் பொருள்களையும் அழிய விடாது பாதுகாக்காதது ஏன்? அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற இடங்களில் எத்தனையோ மரபுரிமை சார்ந்த இடங்கள் அழிவுகளும் நிலையில் உள்ளன.

அங்கு தொல்பொருள் திணைக்களம் தனது செயற்பாடுகளை மந்த கதியில் நடத்தி கொண்டுதமிழர்நிலங்களையும்,மரபுரிமைகளையும் ,குருந்தூர் மலையிலா நீதிமன்ற கட்டளைகளை மீறி புதிய நிர்மாண பணியை மேற்கொள்வதும் ஏன்? எனும் கேள்விக்கு நேரடியாக பதில் கொடுக்க மறுக்கும் சக்திகள் இனவாதத்தையும், மதவாதத்தையும் தூண்டி தம்மை மறைத்துக் கொள்ள பார்க்கின்றனர்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்து, வெளிநாட்டு கையிருப்புகளும் தீர்ந்துள்ள நிலையில், கடந்த காலத்தில் வாங்கிய கடன்களோடு, தொடர்ந்து கடன் பெறும் சூழ்நிலையில் வருமானமின்மை, பொருட்களின் விலையேற்றம் காரணமாக மக்கள் தெற்கின் கட்சிகளின் மீது நம்பிக்கை இழந்து விட்டனர்.

தேர்தல் நடத்தினால் எந்தவொருக்கும் தனித்து ஆட்சி நடத்துவதற்கு பெரும்பான்மை கிடைக்கப் போவதில்லை.

எனவே தேர்தலுக்கு முகம் கொடுக்க மீண்டும் இனவாத சக்திகள் தமிழர்களை பலி எடுக்கத் தெற்கின் மக்களை தூண்டுகின்றனரா?

மறவர்களோடுசேர்ந்துதமிழர்தாயகத்தின் ஒரு சில சுயநல விரும்பிகளும் தமிழர்களின் தேசியத்தை காட்டிக் கொடுக்கவும் அதற்கு எதிராகவும் செயற்படவும் துணிந்து விட்டது போல் தோன்றுகின்றது. 2009 இனப் படுகொலைக்கும் இத்தகையவர்களே காரணமாக இருந்தார்கள். இவரின் கை தற்போதுஓங்கிஉள்ளதுபோல்தெரிகின்றது. இதனை தோற்கடிக்க வேண்டுமானால் தமிழர்களின் தேசியத்தைக் காக்கும் சக்திகள் வலிமை பெறல் வேண்டும். தமிழர்களின் அரசியல் உரிமைகளையும் மரபுரிமைகளையும் பாதுகாக்க சமூக சக்தியாக ஒன்று திரள்வதோடு பிராந்திய அரசியலுக்கு உட்படாது தனித்துவத்தோடு செயல்படுவதற்கான செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தினால் மட்டுமே நாம் சுதந்திரமாக வாழ முடியும். - என்றார். (05)

# மலையக மக்களின் 200 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி யாழில் விசேட நிகழ்வு

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் விசேட நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வு தொடர்பில் மன்றத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்ததாவது:

மலையக மக்களின் வாழ்வியல் சவால்களை வெளிப்படுத்தும் மலையக மக்களின் கலைவெளிப்பாடுகளாக 'புறக்கணிக்கப்பட்ட மலைகள்' என்ற தலைப்பில் கிசோகுமாரின் புகைப்பட கண்காட்சியும், 'தேயிலை சாயம்', எனும் தலைப்பில்மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் புகைப்படங்களின் கண்காட்சியும் ஜுன் 23 தொடக்கம் ஜுன் 25 வரை, யாழ்ப்பாணத்தில் உள்ள ரிம்மர் மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை காட்சிப்படுத்தப்படவுள்ளது.




மேலும், யாழ்ப்பாணம் 286, பிரதான வீதி, அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் ஜுன் 25 மாலை 3 மணிக்கு டிக்கோயா நுண்கலைக் கல்லூரி வழங்கும் நாட்டியநாடகம் மற்றும் பொதுக்கூட்டம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

இதன்போது, இலங்கை தேசிய கிறிஸ்தவமன்றத்தின்பொதுச்செயலாளர் அருட்பணிசுஜிதர்சிவநாயகம், அரசியல் ஆய்வாளர்களானசி.அ.ஜோதிலிங்கம், ம. நிலாந்தன் ஆகியோர் உரையாற்றுவர்.

இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின்பொதுச்செயலாளர்அருட்பணி சுஜிதர் சிவநாயகம், இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் திட்ட முகாமையாளர் ரல்ஸ்டன் வீமன், இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் திட்ட இணைப்பாளர் அருட்பணி ஜுட் சுதர்சன் ஆகியோர் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டனர். (05)

# யாழ்ப்பாணப் பண்பாட்டு விழா இன்று

யாழ்ப்பாணப் பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டு விழா இன்று காலை 9 மணி முதல் யாழ்ப்பாணப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப்பிரதேசசெயலர்தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் தலைமை அதிதியாக யாழ். மாவட்டச்செயலர் அ.சிபாதசுந்தரன் கலந்துகொள்வார். வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் இராஜமல்லிகை சிவசுந்தரசர்மா சிறப்பு அதிதியாகவும் கலையார்வன் கலாபூஷணம் குருசுமுத்து இராயப்பு மதிப்புறு அதிதியாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் வரலாற்றிலும் இதிகாசத்திலும் யாழ்ப்பாணம் பற்றிய கதை நூல் வெளியிடப்படும். அதன் அறிமுக உரையை சி.குருபரநாத் நிகழ்த்துவார். பிரதேசசெயலகப் பணியாளர்கள் வழங்கும் நகைச்சுவை நாடகமும் இடம்பெறும். பாசெய்யூர்கலையகம் வழங்கும் நடனம், யாழ்ப்பாணம் பிரதேச இளம் கலைஞர்கள் வழங்கும் கும்பகர்ணன் நாட்டுக்கூத்து நிகழ்வுகளும் இடம்பெறும். யாழ்பாடி 7 சிறப்பு மலர் வெளியீடும் இடம் பெறும். கலைஞர் கௌரவிப்பு, போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெறும்.

# முன்னாள் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேராவை கைதுசெய்யப்போவதில்லை என அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா தெரிவித்த கருத்துக்காக அவரைக் கைது செய்யப் போவதில்லை என சட்ட மா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளார்.

தம்மைக் கைது செய்வதை தடுக்குமாறு கோரி முன்னாள் சட்டமா அதிபர் தப்புலடிலிவேரா தாக்கல் செய்த மனு தொடர்பிலேயே சட்டமாஅதிபர்திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது. (05)

# கொலன்னாவை விபத்தில் ஆசிரியர் சாவு; மாணவி காயம்: ஆத்திரமடைந்த மக்கள் சாரதி, பஸ் மீது கோரத் தாக்கு

கொலன்னாவ ரஜமஹா விஹாரைக்கு அருகில் வியாழக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வெல்லம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஏழு வயதான பாடசாலை மாணவி படுகாயமடைந்து கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் தனது மகளை குப்பியாவத்தை பாடசாலைக்கு கொண்டு செல்வதற்காக மெகொட கொலன்னாவையிலிருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்து அழைத்துச் சென்று கொண்டிருந்தபோது, கொலன்னாவ ரஜமஹா விஹாரைக்கு அருகில் அதே திசையில் பயணித்த பஸ் திடீரென இடப்புறம் திரும்பியதில் மோட்டார் சைக்கிளை சுமார் ஐம்பது மீற்றர் வரை இழுத்துச் சென்றதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மெகொட கொலன்னாவ பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஆசிரியரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தையடுத்து, ஆத்திரமடைந்த பிரதேசவாசிகள், விபத்தை ஏற்படுத்திய பஸ்ஸை தாக்கி பலத்த சேதத்தை ஏற்படுத்தினர் எனவும் பிரதேசவாசிகளால் தாக்கப்பட்ட பஸ் சாரதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாதுகாப்பு கருதியே பஸ் முல்லேரியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (05)





# குமுக்கன் நதியில் களைகட்டிய பார்த்திபலிங்க அபிஷேக பூஜை

## திருக்கைலாய யாத்திரையை பிரதிபலித்தது

கிழக்கின் தென் கோடியில் இயற்கையாக அமைந்த குமுக்கன் நதியில் கடந்த பிரதோஷ வேளையில் வியாழக்கிழமை மாலை மாபெரும் பார்த்திப லிங்க அபிஷேகம் நடத்தப்பட்டது.

திருக்கைலாய யாத்திரையைப் பிரதிபலித்த இப் பூஜை வரலாற்றில் முதல் தடவையாக சித்தர்கள் குரல் அமைப்பின் ஊடாக நடைபெற்றது.

சுமார் ஆயிரம் கதிர்காம பாதயாத்திரை அடியார்கள் ஒன்றரை மணி நேரம் நதியில் அமிழ்ந்து இந்த அபிஷேக வழிபாட்டில் கலந்து கொண்டனர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் தலைவர் ஆதித்தன் உப தலைவர் மனோகரன் நமசிவாய மகேஸ்வரன் சுவாமி வேல்சாமி தியாகராஜா சகா சுவாமி சிறில் சுவாமி தியாகராஜா சுவாமி உள்ளிட்ட பலர் முன்னணியில் இருந்து செயற்பட்டனர்.

அங்கு இவ் வழிபாட்டின் முக்கியத்துவம் பற்றி ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி நதிக்குள் இருந்து சொற்பொழிவாற்றினார்.

சிவாகமங்களில் சிவபெருமானே அன்னை பார்வதிக்கு சொன்ன அதி உன்னத வழிபாடு இந்த பார்த்திப லிங்க பூஜை. கலியுகத்திலே மணலிலே சிவலிங்கம் செய்து வழிபடுவதுதான் உயர்ந்த வழிபாடு.

அனைத்து பேறுகளையும் கேட்கின்ற வரங்களையும் உடனே வழங்க கூடிய வழிபாடு என பரமேஸ்வரனே அன்னை பார்வதிக்கு சொல்கிறார்.

திருக்கேதாரத்திலே இந்த வழிபாட்டை செய்துதான் அன்னை பார்வதி தேவி சிவ பரம்பொருளின் உடலில் சரி பாதி பெற்று முத்தி பேறு அடைகிறார். அன்று முதல் ராமபிரான் ராவணேஸ்வரனை கொன்ற ப்ரமகத்தி தோம் நீங்க ராமேஸ்வரத்தில் இதே வழிபாட்டை செய்து தான் தன் தோஷங்களை போக்கினார்.

இதே போல் சூரபத்மனை அழித்தபோது முருகப் பெருமானுக்கு பிரம்மகத்தி தோஷம் பிடிக்கிறது. அப்போது திருச்செந்தூரில் கடற்கரையில் பஞ்சலிங்கங்களை மணலிலே பிடித்து வழிபாடு செய்து தோங்கள் நீங்க பெறுகிறார்.

இதே வழிபாடை தான் திருகோணமலையில் மணலிலே 1,008 சிவலிங்கங்கள் செய்து இலங்கை வேந்தன் ரராவனேஸ்வரன் பல்லாயிரம் வருடங்களுக்கு முன் செய்து இலங்கை வளநாட்டையே மாபெரும் சிவ பூமியாக ஸ்வர்ண பூமியாக மாற்றினான் என பல மிகப் பழமையான ராவண சம்கிதை, ராவண கட்கம், குமார தந்திரம் போன்ற கிரந்த நூல்களில் சொல்லபட்டுள்ளது.

குமுக்கன் ஆற்றங்கரையில் மண்ணால் சிவலிங்கம் பிடித்து பிரதோஷ வேளையில் செய்த பூஜை என்பது ஒரு சாதாரண பூஜை அல்ல. அது பிறவியை அறுக்கும் மஹா சக்தி. இதைச் செய்தோர்க்கு இந்தப் பிறவியில் இனி பித்ரு தோஷங்களோ, கண்டங்களோ கிடையாது - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதி ரணிலுடன் தொடர்பில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களை அறிவேன்

## சரத் பொன்சேகா கூறுகிறார்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்பிலுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்பில் நான் அறிவேன். எனினும் அது தொடர்பில் என்னால் கருத்துக்களை வெளியிட முடியாது. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி , அந்தக் கட்சியைக் காட்டிக் கொடுப்பதற்கு நான் தயாராக இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

நாட்டில் பாதாள உலகக் குழுவினரின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. எல்லா பகுதிகளிலும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. எல்.டி.டியினரின் அனைத்து ஆயுதங்களும் எம்மால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. எனவே பாதாள உலகக் குழுவால் புலிகளின் ஆயுதங்களைப் பயன்படுத்துவதாகக் கூறப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆனால் பாதாள உலகக்குழுவினருக்கு இன்று ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வது கடினமான விடயமல்ல. நாட்டில் பல விடயங்கள் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கத்தால் அதிகாரம் முறையாகப் பயன்படுத்தப்படாமையே இதற்கான காரணமாகும்.

ஐக்கியமக்கள்சக்தியிலிருந்துயார்அரசாங்கத்துடன் இணைவார்கள் என என்னால் கூற முடியாது. எனினும் ஜனாதிபதியுடன் தொடர்பிலுள்ள சிலர் பற்றி நாம் அறிவோம். அது தொடர்பில் என்னால் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்க முடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவீர்களா எனக் கேட்டு என்னை அசௌகரியத்துக்கு உள்ளாக்க வேண்டாம். எனினும் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகிச் சென்று, அக்கட்சியை காட்டிக் கொடுப்பதற்கு நான் தயாராக இல்லை. - என்றார். (05)

# முல்லைத்தீவு குருந்தூர்மலையில் அப்பட்டமான அரச சர்வாதிகாரம்

## சபா குகதாஸ் காட்டம்



தமிழர்களின் தொல்லியல்களை சிங்களபௌத்தமாகமாற்றியமைப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் தனது அரச இயந்திரத்தை சர்வாதிகாரமாக வழிநடத்தி தமிழர்களின் இருப்பை அழிக்க பல முனைகளிலும் கங்கணம் கட்டி நிற்கின்றனர் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளவை வருமாறு -

இலங்கைத்தீவில் ஆரம்பத்தில் அநுராதபுரத்தை ஆண்ட முத்துசிவன் மன்னனின் மகன் தீசன் (தேவ நம்பியதீசன்) என்கிற தமிழ் மன்னன் காலத்தில் தான் பௌத்தம் கொண்டுவரப்பட்டது என்ற உண்மையை மகாவம்சத்தின் பாளி மொழியிலான மூலப் பிரதி கூறியுள்ளதை மறைத்துஉண்மையானதமிழ்ப்பௌத்த தொல்லியல் அடையாளங்களை சிங்களபௌத்தமாகமாற்றும்எதேச்சதிகார நடவடிக்கைகளையே பேரினவாத ஆட்சியாளர்களும் தொடர்ந்து மேற்கொள்கின்றனர்.

தீசன் என்ற பெயரை திஸ்ஸ என சிங்களத்தில் பிற்காலத்தில் மாற்றியது போலவே அனுராதபுரத்தில் இருந்து வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முழுவதும் தமிழ் மன்னர்கள் ஆண்ட போது சைவ ஆலயங்களுடன் தமிழ் பௌத்தமும் பரவி இருந்தது அவ்வாறான தொன்மைகளைத் தற்போது சிங்கள ஆட்சியாளர்கள் சிங்கள பௌத்தமாக மாற்றியமைக்கும் செயற்பாடு தமிழின அழிப்புக்கு வலுச் சேர்க்கும் பாரிய ஆபத்தாக தமிழர் தாயகத்தில் மாறியுள்ளது.

குருந்தூர் மலையில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட செயற்பாடு சட்டத்துக்கு முரணானது என்பதை நீதிமன்ற தடையே மிகப் பெரும் ஆதாரம். அதனை மீறி இராணுவத்தை முழுமையாக பயன்படுத்தி நீதிமன்றத்தை அவமதித்து விகாரையைக் கட்டி முடித்து இராணுவம் அமைத்ததாக பெயர்ப் பலகை இடப்பட்டுள்ளது என்றால் தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு நடைபெறும் அடக்கு முறைகளுக்கு மிகப் பெரும் ஆதாரம் ஜனநாயகம் என்ற பெயரில் நடைபெறும் அரச சர்வாதிகாரம் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# கடந்த ஆறு மாத காலப் பகுதிக்குள் மட்டும் பேரா.பல்கலை மாணவர் ஐவர் தற்கொலை

## இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் சுட்டிக்காட்டு



நிறைவடைந்த ஐந்தரை மாத காலப்பகுதியில் மாத்திரம் பேராதனை பல்கலைக்கழக மாணவர்களில் ஐவர் தற்கொலை செய்துக் கொண்டுள்ளார்கள். மாணவர்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, இப்பிரச்சினைக்குதீர்வுகாணகல்வி அமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கல்வி அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர்களுடன் புதன்கிழமை கலந்துரையாடலில் ஈடுபட்டேன். பல்கலைக்கழக மாணவர்கள், சமூகத்தினர்நடைமுறையில்எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விசேட கவனம் செலுத்துமாறு அவர்கள் வலியுறுத்தினார்கள்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் பெரும்பாலானோர் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த ஆண்டு நிறைவடைந்த காலப்பகுதியில் மாத்திரம் ஐந்து மாணவர்கள் தற்கொலை செய்துக் கொண்டுள்ளார்கள். தற்கொலைக்கு முயற்சித்த இரண்டு மாணவர்களுக்கு பல்கலைக்கழக உளவியல் பிரிவு ஊடாக உளவியல் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களில் பெரும்பாலானோர் ஒருவேளை தான் உணவு உண்கிறார்கள். மாணவர்களின் செலவுகளுக்கு பணம் அனுப்ப முடியாத நிலையில் பெற்றோர் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மாணவர்கள் உடல் நல ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள், உடல் மெலிந்துள்ளார்கள். விரிவுரைகளின் போது மாணவர்கள் மயங்கி விழுகிறார்கள் என பல்கலைக்கழக பேராசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். மாணவர்கள் நாட்டில் எதிர்காலம் ஆகிய இந்த பிரச்சினையின் பாரதூரத்தன்மையை விளங்கி துரிதகரமாக ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். கல்வி அமைச்சு தலையிட வேண்டும். - என்றார்.

இதன்போதுஎழுந்துஉரையாற்றியகல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாடளாவிய ரீதியில் உள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் ஒரு லட்சத்து 45 ஆயிரம் மாணவர்களுக்கு மாஹாபொல புலமை பரிசில் திட்டம் ஊடாக மாத கொடுப்பனவு வழங்கப்படுகிறது. பல்வேறு காரணிகளால் 11 ஆயிரம் மாணவர்களுக்கு புலமை பரிசில் வழங்கப்படுவதில்லை. ஆகவே இந்த மாணவர்களுக்கும் புலமை பரிசில் வழங்க உரியநடவடிக்கைதற்போதுஎடுக்கப்பட்டுள்ளது. - என்றார். (05)

# மருந்து தட்டுப்பாட்டுக்கு நிதி அமைச்சு பதில் வழங்காவிட்டால் இந்த பதவியில் இருக்கேன்

## சுகாதார அமைச்சர் கெஹலிய திட்டவட்டம்



நாட்டில் ஏற்பட்டிருக்கும் மருந்து பொருள்களுக்கான தட்டுப்பாட்டை சரி செய்ய நிதி அமைச்சுடன் பேச்சு நடத்தவுள்ளேன். முறையான தீர்வு கிடைக்காவிட்டால் தொடர்ந்தும் இந்த பதவியில் இருப்பதற்கு எதிர்பார்க்க மாட்டேன் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டில் மருந்து பொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாடு தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

மருந்துப்பொருள்கள்கொண்டுவரும் நடவடிக்கை தொடர்பாக 9 மாதமளவில் பெறுகை கோரல் தொடர்பில் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது. அதனை குறைத்துக்கொள்ள அமைச்சரவைக்கும் பல சந்தர்ப்பங்களில் சென்றோம். அமைச்சரவையும் அதற்கு அனுமதி வழங்கி இருந்தது.

அதற்கிடையில் ஒருசில குழுவினர் இவ்வாறு மருந்து பொருள்கள் கொண்டுவருவதை நிறுத்துமாறு உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தனர். அதனால் எமக்கு பாதிப்பு ஏற்பட்டது.

சுகாதாரத்துறை தொடர்பாக நீதிமன்றத்தின் சில தீர்ப்பு எமக்கு பாதகமாக அமைந்திருக்கிறது. இது தொடர்பாக நீதி அமைச்சருக்கும் எமது கவலையை தெரிவித்திருக்கிறோம். மருந்து தட்டுப்பாட்டுக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

அடுத்த விடயம் நிதி தொடர்பாகவும் எமக்குப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. சுகாதார துறைக்குப் போதுமான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றே நாங்கள் கேட்கிறோம். அதனால் இது தொடர்பாக பதில் நிதி அமைச்சுடன் கலந்துரையாடல் ஒன்று இருக்கிறது. கலந்துரையாடலில் எமக்கு சரியான முடிவுகிடைக்காவிட்டால்அதுதொடர்பாக இந்த சபைக்கு அறிவிப்பேன்.

அத்துடன்விடயத்துக்குபொறுப்பான அமைச்சர் என்றவகையில், நாட்டில் மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் போது அதற்கு பதில் சொல்லவேண்டும். அதனால் நிதி அமைச்சில் இடம்பெற்றும் கலந்துரையாடலின் மூலம் மருந்துபொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டை சரி செய்துகொள்ள முடியாமல் போனால் தொடர்ந்தும் இந்த பதவியில் இருப்பதற்கு எதிர்பார்க்க மாட்டேன். ஏனெனில் அது இந்த சேவைக்கு சமூகத்துக்கு செய்யும் பெரும் குறையாகும். - என்றார். (05)

# மின்சார வேலியில் சிக்குண்ட யானை புத்தளத்தில் சடலமாக மீட்கப்பட்டது



புத்தளம்மஹாகும்புக்கடவல பிரதேசத்தின் கவயாங்குளம் பகுதியில்காட்டுயானையொன்று உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யானை உயிரிழந்துள்ளதாக பிரதேச மக்கள் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இதனையடுத்து குறித்த இடத்துக்கு அதிகாரிகள் சென்று யானையைப் பார்வையிட்டுள்ளனர்.

குறித்த யானை மின்சாரவேலியில் சிக்குண்டுஉயிரிழந்துள்ளதாகவனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதிவலு கொண்ட மின்சார வேலியை அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் பொருத்தியுள்ளதாகவும் குறித்த மின்சார வேலியில் சிக்குண்டே யானை உயிரிழந்தன எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்போது காணியின் உரிமையாளர் கைது செய்யப்பட்டு ஆனமடுவ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்தயானைக்குநிகாவெரெட்டியமிருக வைத்தியர் வைத்தியர் இசுரு என்பவரால் பிரேதபரிசோதனைமுன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த யானை சுமார் 8 அடி உயரம் கொண்டதாகவும் 20 வயது மதிக்கத்தகது எனவும்புத்தளம்வனஜீவராசிகள்கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர். (05)

# வெலிக்கடையில் இடம்பெற்ற ராஜகுமாரி இறப்பு; முன்னேற்ற அறிக்கை கோருகின்றது நீதிமன்று

வெலிக்கடை பொலிஸ் காவலில் வைத்து உயிரிழந்தார் எனக் கூறப்படும் ராஜகுமாரி என்ற வீட்டுப் பணிப்பெண்ணின் மரணம் தொடர்பிலான விசாரணைகளின் முன்னேற்றம் அடங்கிய அறிக்கையை எதிர்வரும் 26 ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுணாவல உத்தரவிட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பான விசாரணை கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது.

இதன்போது சாட்சயமளித்த ஒருவர், வெலிக்கடை பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து பொலிஸ் உத்தியோகத்தரால் இராஜகுமாரி தாக்கப்பட்டதைக் கண்டார் எனத் தெரிவித்தார். (05)

# முல்லைத்தீவுக்கு ஜனாதிபதி விஜயம்; மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள்

## மாவட்ட பதில் அரச அதிபர் தெரிவிப்பு



எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளார் எனவும் முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கின்ற வட மாகாணத்துக்கான விசேட தேவை உடையவர்களுக்கான வைத்தியசாலையை திறந்துவைக்க உள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசேட நடமாடும் சேவை ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இதன் மூலமாக முல்லைத்தீவு மக்களுக்கு பல்வேறு நன்மைகள் கிடைக்கஉள்ளதாகவும் முல்லைத்தீவு க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (05)

# கராப்பிட்டிய போதனாவில் வைத்தியர் பற்றாக்குறை

## நோயாளிகளைக் கையாள்வதில் சிக்கலாம்

காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சுமார் 100 வைத்தியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால், நோயாளிகளைக் கையாளுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை 556 ஆக உள்ளபோதிலும் தற்போது 460 மருத்துவர்களே உள்ளனர்.

சில மருத்துவர்கள் வெளிநாடு சென்றமையே இதற்குக் காரணம் எனவும் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைநிர்வாகம்தெரிவித்துள்ளது. (05)

# கோரக் கோயில் அகோர மாரியம்மன் தீ மிதிப்பு திருவிழா இன்று ஆரம்பம்






(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ்ப்பிரிவு கோரக்கோயில் ஸ்ரீ அகோர மாரியம்மன் ஆலய வருடாந்த தீமிதிப்பு சடங்கு இன்று வெள்ளிக்கிழமை கடல் நீர் எடுத்து வந்து திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து ஒன்பது நாட்கள் திருவிழா இடம்பெற்று பத்தாம் நாள் ஜூலை 3 தீ மிதிப்பு சடங்கு நடைபெற இருக்கிறது.

ஆலய பிரதம பூசகர் முருகேசு ஜெகநாதன் தலைமையில் சடங்குகள் இடம் பெறும். நாளை சனிக்கிழமை பாற்குடபவனி இடம் பெறும். காலை 7 மணியளவில் சம்மாந்துறை பத்ரகாளியம்மாள் ஆலயத்தில் இருந்து பாற்குடபவனி ஆரம்பித்து அகோர மாரியம்மன் ஆலயத்தை வந்தடைய இருக்கிறது.

ஜூலை மூன்றாம் தேதி திங்கட்கிழமை காலை 8 மணியளவில் மஞ்சள் குளித்து தீமிதிப்பு சடங்கு இடம்பெறும்.

# எந்த ஆட்சி ஏற்பட்டாலும் ஊழலை ஒழிக்கமுடியாது

## அடித்துக் கூறுகிறார் குமார வெல்கம்

எந்த ஆட்சியிலும் ஊழலை இல்லாதொழிக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 'இலங்கையைப்பொறுத்தவரையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் ஊழலை ஒழிக்கவே முடியாது.

அனைத்து அரசாங்கங்களும் ஆட்சிக்கு வரும்போது பல வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கி தமது அரசாங்கத்தை அமைக்கின்றன.

மாறி மாறி வரும் அனைத்து அரசாங்கங்கள் இதனையே வழக்கமாகக் கொண்டுள்ளன.

இவ்வாறுதான் மோசடி செய்யப்பட்ட அரச நிதியை அரசுடைமையாக்குவதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கத்தில் ஊழல்வாதிகள் எவரும் தண்டனைக்குட்படுத்தப் படவில்லை.

ஊழல் என்பது புதியதொரு விடயமல்ல. தேர்தல் முறைமையின் ஊடாகவே ஊழல் அதிகரித்துள்ளது. நாடாளுமன்றம் தற்போது ஒரு வர்த்தக நிறுவனம் போன்றே செயற்படுகின்றது.

சூழ்நிலைக்குத் தேவையான சட்டங்களை இயற்றியாவது ஊழலை ஒழிக்க வேண்டும்.

வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் விலைமனுக்கோரல் விவகாரத்தில் பாரிய ஊழல் மோசடிகள் இடம்பெறுகிறன.

எனவே இவற்றினைக் கருத்திற் கொண்டே ஊழல் எதிர்ப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

யார் ஆட்சிக்கு வந்தாலும் ஊழலை இல்லாதொழிக்க முடியாது என்று மக்கள் குறிப்பிடுகின்றமை உண்மையான விடயமாகும்' என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# யோகா தின விழிப்புணர்வு திருமலையில் நடைபவனி







(அபு அலா)

சர்வதேச யோகா தினத்தையொட்டி திருமலை வளாக கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவபீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட யோகா தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி வியாழக்கிழமை இடம்பெற்றது..

கிழக்கு பல்கலைக்கழக திருமலை வளாக துணைத் தலைவர் சந்திரவதனி ஜி.தேவதாசன் தலைமையில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு முன்னால் காலை 7.45 மணிக்கு ஆரம்பமான இந்த நடைபவனி தபாலக சந்தி வீதி வழியாகச் சென்று திருகோணமலை நகரசபைக்கு முன்னால் முடிவுற்றது.

இந்த விழிப்புணர்வு நடைபவனியில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள் மாகாண ஆணையாளர் மருத்துவர் இ.ஸ்ரீதர், கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவபீட விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், சுதேச மருத்துவ திணைக்கள உத்தியோகத்தர்க உள்ளிட்ட சித்த மருத்துவபீட மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# அதிகரித்துவரும் வன்முறைகளால் சமூகப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்

## முன்னாள் பொலிஸ் அதிகாரி எச்சரிக்கை

துப்பாக்கிப் பாவனையால் அதிகரித்து வரும் கொலைகள் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக குற்றவியல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்த முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

தனியார் நிகழ்ச்சி ஒன்றில் வழங்கிய நேர்காணலில், வெளிநாட்டவர்கள் இந்நாட்டில் முதலீடு செய்யும் போது நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதாகத் தெரிவித்திருந்தார்.

2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைகளின் எண்ணிக்கையை விடவும் இவ்வருடம் இதுவரை அதிக எண்ணிக்கையிலான மனிதக் கொலைகள் பதிவாகியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் சமூகத்தின் பாதுகாப்பு அழிந்து வருவதாக முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

# குழந்தையின் உயிரை பறித்த சர்க்கஸ் கிணறு

2 வயதுக் குழந்தையொன்று தம்பகல்ல பிரதேசசபை மைதானத்தில் கேளிக்கை நிகழ்ச்சியொன்றுக்காக அமைக்கப்பட்ட, சர்க்கஸ் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தை சேர்ந்த ,குறித்த சர்க்கஸ் கிணற்றின் உரிமையாளரின் மகளே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த சர்க்கஸ் கிணற்றை அதன் உரிமையாளர் அலங்கரித்துக்கொண்டிருந்த நிலையில், அவரது குழந்தை அதில் ஏற முயற்சித்ததாகவும் இதன் போது எதிர்பாராதவிதமாக கிணற்றுக்குள் தவறி விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து உடனடியாக அக்குழந்தை மொனராகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குழந்தையின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவு

தெற்கு மற்றும் மேல் மாகாணங்களில் நடைபெறும் வன்முறைக் குற்றங்களுக்கு எதிராக உடனடி மற்றும் கடுமையான நடவடிக்கைஎடுக்குமாறு பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு மேற்படி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன ஏனப் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அதேபோல், அங்கீகரிக்கப்படாத அல்லது உரிமம் பெறாத துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை வைத்திருப்போர் அவற்றைக் கையளிக்க ஜூலை 31 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் அவ்வாறான அதிகாரிகளை பதவி நீக்கம் செய்து தகுதியான அதிகரிகளை உரிய பதவிகளுக்கு நியமிக்குமாறு அமைச்சர் டிரான் அலஸ் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை தென் மற்றும் மேல் மாகாணங்களில் கொலை குற்றங்கள் அதிகரிப்பதற்கான காரணம் குறித்த மாகாணங்களில் உள்ள சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் திறமையின்மை மற்றும் அலட்சியப் போக்கே காரணம் என பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

## தமிழ் ....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

அவசியப்படுகின்றன. 2024 ஆம் ஆண்டில் மேற்படிச்செயற்பாடுகளின் பெருமளவான முன்னேற்றங்களை காண முடியும் என நம்புகிறேன்.

கேள்வி:

பொருளாதார நெருக்கடிகள் என்பது பொதுவாக அனைத்து நாடுகளும் எதிர்கொள்ளும் பிரச்சினையாகும்.அதேபோல்அது பொதுப் பிரச்சினையாகும். துறைசார்ஒத்துழைப்புக்களே அதற்காகநீண்டகாலதீர்வாக அமையும்.

பதில்:

வர்த்தகச்சந்தைகளை இலக்கு வைத்த உபாயங்கள் மட்டுமே தற்போது காணப்படும் மாற்றுவழியாகும். உண்மையாக சொல்வதாயின்இதனைவிட மாற்று வழிகள் எவையும் கிடையாது. நீண்டகாலமான வர்த்தகச் சந்தையின் ஊடகவே பிரச்சினைகள் நிவர்த்திக்கப்படுகின்றன.

கேள்வி:

ஜனநாயகத்தை தவிர்ந்த அனைத்து ஆட்சி முறைமைகளும் பயங்கரமானது என்பதை வின்ஸ்டன்சர்ஷில்ஒருமுறை நேரடியாகவேகூறியிருந்தார். பொருளாதாரத்தை பலப்படுத்திக்கொள்வதற்கு இருக்கின்ற இறுதி அஸ்திரம் பழமைவாதமாகும் என்பதை உணரும் வரையில் சோசலிசம், பாதுகாப்புவாதம், எண்ணியல்வாதம், ஜனரஞ்சகவாதம் ஆகியவற்றைபின்பற்றுவதை அவதானிக்க முடிகின்றது.

இவ்விடத்தில் இலங்கை வெளிநாட்டு தொடர்பாடல்களின் அவசியத்தை எவ்வாறு காண்கிறது. அதன் உபாயங்கள் மற்றும் தொடர்பாடல்கள் யாதெனவும் அடுத்தபடியாக முகம்கொடுக்கவுள்ள அவதானம்மிக்க நிலைமை எவ்வாறானது?

பதில்:

தெற்காசியாவை முதன்மையாக கொண்டதாகவே இலங்கையின் உபாயமார்க்கசெயற்பாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக ஆசிய வலய நாடுகளான இந்தியா, ஜப்பான், மத்திய கிழக்கு, சீனாவுடன் தொடர்புகளை பலப்படுத்திக்கொள்ள நாம் முயற்சிக்கிறோம். பொதுநலவாயநாடுகளுடன் ஐரோப்பாவுடன் தொடர்புகளை பலப்படுத்திக் கொள்ளவும்நாம்முயற்சிக்கிறோம்.

கேள்வி:

போட்டிச் சந்தை அழுத்தங்கள், கொவிட் தொற்றுநோய், குறிப்பாக உக்ரைனின் தற்போதைய மோதல் நிலைமை காரணமாக, அமெரிக்காவிற்கும் அதன் நட்பு நாடுகளுக்கும், சீனாவிற்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் இடையே வேகமாக முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இதில் இலங்கையின் நிலைப்பாடு என்ன? மேலும், அதற்கு என்ன வழிமுறைகளை பின்பற்றுகிறீர்கள்?

பதில்:

நாங்கள் உலகளாவிய தெற்கு மற்றும் ஆசியாவின் நிலைப்பாட்டுடன் இருக்கிறோம். உலகவல்லரசுகளான அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய இரண்டும் நமக்குத் அவசியம்.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஆசியான் நாடுகளின் கண்ணோட்டத்தைகருத்தில் கொள்வதில் பசிபிக் மற்றும் பிற பிரச்சினைகள் மிகவும் முக்கியமானவை. சீனாவின் எழுச்சி பிராந்திய நாடுகளின் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாகஉள்ளது. எனவே, சீனாவின் பொருளாதார வளர்ச்சி எங்களுக்கு மிகவும் முக்கியமானது. இந்தியா மற்றும் ஆசியான் நாடுகளிலும், மத்திய கிழக்கிலும் தொடர்ந்து நிலையான வளர்ச்சியைக் காண இன்னும் 20-25 ஆண்டுகள் ஆகும். பலதரப்பு உறவுகள்வலுப்பெறுவதுடன், தற்போதுள்ள இருதரப்பு இலங்கை-அமெரிக்க உறவுகளுக்கு மதிப்பளிக்கப்படும்.

இங்கு இலங்கையின் வெளியுறவுக் கொள்கை முக்கியமல்ல. ஆரம்பம் முதலேநாம்அமெரிக்காவுக்கு ஆதரவுவழங்கிவருகிறோம். தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் உள்ளன. அவற்றைநாம்கூட்டாகதீர்க்க வேண்டும்.எல்லாவற்றையும் ஒருவல்லரசிற்குஅடிபணிந்து செய்ய முடியாது. சுமுகமாக ஒத்துழைப்பதன் மூலம் நெருக்கடியான சூழ்நிலைகளைத் தணிக்க முடியும்.

கேள்வி:

நமது பாதுகாப்புக்கு அமெரிக்காமுக்கியம்என்பது அடிக்கடி பேசப்படும் ஒன்று. மேலும் சீனாவின் ஆதரவு நமது பொருளாதாரத்திற்கு முக்கியமானது. சீன முதலீடு மற்றும் சீன வர்த்தகம் இலங்கைக்கு மிகவும் முக்கியமானதாகும். மறுபுறம், சீனாவுடனான பரந்த உறவு சிக்கலாக இருக்கிறதா?

பதில்:

மிகப்பெரிய தனியார் துறை முதலீட்டாளராக இருக்கும் சீனா, அதிக இருதரப்புக் கடன்களை வழங்கும்நாடு. நமதுநாட்டின் கடன் மறுசீரமைப்பை எவ்வாறுகையாள்வதுஎன்று சீனா தயங்கியது.

பாரிஸ் கிளப்புடன் இணைந்துசெயலாற்றுவதற்கு எமக்கு வாய்ப்பு கிடைத்தது. இந்தியாவும்சீனாவும்அதை வெளியில்இருந்துகவனித்து வந்தன. இருப்பினும், இந்தியா பின்னர் பாரிஸ் கிளப்பின் யோசனையில் இணைந்தது.

பொதுவான தளத்தில் ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு பார்வையாளராக மட்டுமே சீனா பங்கேற்றது. மேலும் எங்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைநடத்துவதாக அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் சர்வதேச நாணய நிதியத்துடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தவே சீனா ஆர்வம் காட்டியது. சீனாஉள்ளிட்டபலம்வாய்ந்த நாடுகள் செயற்திறனுடன் பங்காற்றுகின்றன.

கேள்வி:

உங்கள்நாடு, உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளுடனும்முக்கியமான வர்த்தக உறவுகளைக் கொண்டுள்ளது. இந்த நிலைமையை எப்படிப் பார்க்கிறீர்கள்

பதில்:

தெற்கில் உள்ள பெரும்பாலான நாடுகள் வெளியில் இருந்துவெறுமனேபார்த்துக் கொண்டிருக்கின்றன. பல ஆசியான் நாடுகள் சில செயற்பாட்டு திட்டங்களை முன்னெடுக்கின்றதோடு பெரும்பாலான நாடுகள் நடுநிலையான அணுகுமுறையைப் பின்பற்றுகின்றன. ஐரோப்பாவில் மோதல் நிலை தொடங்கியுள்ளது. எனவே நாங்கள் சுதந்திரமான, உக்ரைனை மட்டுமே நம்புகிறோம். நாங்கள் அதை எவ்வாறு தீர்க்கிறோம் என்ற கேள்வி உள்ளது மற்றும் ரஷ்யா அதை மீண்டும் செய்ய முடியும், ஆனால் இறுதியில் ரஷ்யாமட்டுமே இதைதீர்க்க முடியும்.

# இந்திய மீனவர் 22 பேர் கைது

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 22 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு அருகே வியாழக்கிழமைஇரவுஇந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டபோது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் 3படகுகளையும்அதிலிருந்த 22மீனவர்களையும்கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை மயிலிட்டி துறைமுகத்துக்கு அழைத்து வந்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.06.2023இல் வெளியிடப்பெற்றது.